Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 24 வெள்ளிக்கிழமை (09.08.2013) பக்கங்கள் 20 ஓசை – 313


ஆடிப்பூரம் 03


இன்பப் பெருநாள் 05


வருகிறார் இளவரசி 06


கௌரவிப்பு 09


சர்ச்சை 18

# விதிகளை மீறியது சம்பந்தனின் உரை நாடாளுமன்றில் நேற்றுக் குழப்பம்

(கொழும்பு)

நாடாளுமன்ற விதிகளை மீறிய வகையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் நேற்று உரை நிகழ்த்த முற்பட்ட போது சபையில் குழப்பம் தோன்றியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் சபை ஒத்திவைப்பு வேளையில் காணி சுவீகரிப்பு தொடர்பான பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு முற்பட்டபோது சபையில் குழப்பம் ஏற்பட்டது.

வழக்கு விசாரணை இடம்பெறுகின்ற சில விடயங்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஆளும் கட்சி உறுப்பினர், இதன் போது கூறியுள்ளார்.

13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு அமைவான வடக்கின் காணி அதிகாரம் தொடர்பிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் நேற்று பிரேரணையை சமர்ப்பிப்பதற்கு முனைந்தார். இதன்போது ஏற்பட்ட வாதப் பிரதிவாதங்களால் சபை நடவடிக்கைகளை 5 நிமிடங்களுக்கு ஒத்திவைத்த பிரதிச் சபாநாயகர், கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் ஏற் படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய வழக்கு விசாரணையுடன் தொடர்புடைய விடயங்களைத் தவிர்த்து நாடாளுமன்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கருத்து வெளியிட முடியும் எனப பிரதிச்சபாநாயகர் அறிவித்தார்.

## பொதுநலவாய மாநாட்டில் சீன வர்த்தகத் தூதுக்குழு

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெறவிருக்கும் பொதுநலவாய மாநாட்டின் வர்த்தக அமர்வுகளின்போது சீனாவின் வர்த்தகத்துறை சார்ந்த நிபுணர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

பொதுநலவாய அமைப்பில், சீனா அங்கத்துவ நாடாக இல்லாதபோதிலும், இப்பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாநாட்டில் சீனாவின் பல வர்த்தக நிபுணர்கள் கலந்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவின் சின்ஹுவா இணையத்தளம் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

## சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க வருகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

நாட்டின் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதால் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு விசேட சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களை கட்டுப்படுத்த நீதித்துறையை வலுப்படுத்த வேண்டியது அவசியமானது என சுட்டிக்காட்டப்படுகிறது. சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் 30 ஆண்டுகள் பழமையானவை எனவும், சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாட்சியங்கள் தொடர்பான

19 ஆம் பக்கம் பார்க்க

## வரணி மருத்துவமனையின் குறைபாடுகளை அகற்ற முடிவு

(கொடிகாமம்)

வரணிப் பிரதேச வைத்தியசாலையின் குறைநிறைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை காலை 11 மணியளவில் வைத்தியசாலையில் நடைபெற்றது.

வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் வேண்டுகோளினை ஏற்று இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், வைத்தியசாலையின் வைத்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் விதிகளை மீறி சுவரொட்டிகள் யாழ்.குடாவில் தீவிர கண்காணிப்பு



(யாழ்ப்பாணம்)

தேர்தல் விதிகளுக்கு முரணான வகையில் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றமை தொடர்பில் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் இருவர் குடாநாட்டின் பல பகுதிகளிலும் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதாக யாழ். மாவட்ட தேர்தல் ஆணையாளர் அச்சுதன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சியின் சில பகுதிகளிலும், தென்மராட்சியின் சில பகுதிளிலும் இவ்வாறான சுவ

19 ஆம் பக்கம் பார்க்க

விசேட வாகனங்களில் வாக்களிக்கச் செல்வதற்கு

## விசேட தேவையுடையோர் முன்கூட்டியே விண்ணப்பிக்கவேண்டும்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு வாகனங்களில் செல்வதற்கான அனுமதியைப் பெற முன்கூட்டியே விண்ணப்பிக்க வேண்டும் என தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

அனுமதியை பெற்றுக்கொள்ளாதவர்கள் வாக்களிப்பு நிலையம் வரை வாகனங்களில் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும் தேர்தல்

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் வன்செயல் வடக்கில் குறைவு
### தேர்தல் திணைக்களம் திருப்தி

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தேர்தல் வன்முறைகள் குறைந்த அளவிலேயே பதிவாகியுள்ளன என்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேர்தல் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் நாடு முழுவதும் இதுவரை 56 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. இதில் 12 முறைப்பாடுகள் குருநாகல் மாவட்டத்தில் பதிவாகியுள்ளன.

மேலும் யாழ். மாவட்டத்தில் 4 முறைப்பாடுகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 முறைப்பாடுகளும் நுவரெலியா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் தலா 2 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தேர்தல் முறைப்பாட்டு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் மாத்தளையில் 10 முறைப்பாடுகளும் கண்டி மாவட்டத்தில் 5 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. இதேவேளை, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் தலா ஒரு முறைப்பாடு வீதம் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் செயலகம்

19 ஆம் பக்கம் பார்க்க

## பகிஷ்கரிப்பில் குதித்தனர் மருத்துவர்கள் ஸ்தம்பித்தது தெல்லி. மருத்துவமனை

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஆதார வைததியசாலையில் வைத்தியர்களின் பணிப்பிற்கு கீழ்ப்படியாமலும், சேவையில் அதிக நாட்டமின்றியும் இருக்கும் தாதிய உத்தியோகத்தரின் செயற்பாட்டிற்கு எதிராக வைத்தியர்கள் நேற்றைய தினம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் உளநலவிடுதியில் பணியாற்றும் குறித்த ஆண் தாதிய உத்தியோகத்தர் அங்கு தங்கியிருக்கும் உளநல நோயாளர்களுடன் பழகும் விடயம், மற்றும் வைத்தியர்களின் பணிப்பினை உதாசீனம் செய்தல் என தனது கடமையினை சரிவர செய்யாமல் இருந்து வந்துள்ளார்.

இந்த நிலையிலேயே இவர் மீது தனது கடமையில் உதாசீனம் செய்வதனை எதிர்த்து வைத்தியர்கள் நேற்றுக்காலை

19 ஆம் பக்கம் பார்க்க




## தபால் மூல வாக்களிப்பு அடுத்த மாதம் முதல்வாரத்தில்

(கொழும்பு)

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு அடுத்த மாதம் 9 மற்றும் 10 ஆம திகதிகளில் நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தபால் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள அரச அலுவலகங்களில் குறித்த 2 நாட்களிலும், தபால் மூல வாக்காளர்கள் தமது வாக்கினை பதிவு செய்ய முடியும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்

19 ஆம் பக்கம் பார்க்க

# சமாதானமும் சந்தோஷமும் மேலிட ரம்ழான் பெருநாள் வாழ்த்துக்கள்



"ரம்ழான் பெருநாள் மகிழ்ச்சிகரமானதாக அமையட்டும். சமாதானமும் சந்தோஷமும் மேலிட வாழ்த்துகிறேன். இந்நாளில் இறையாசி நிறைய கிடைக்கவேண்டுமென வேண்டி தங்களுக்கு மகிழ்ச்சிகரமாக நோன்புப்பெருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக" என்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

ஆளுநர் விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


இஸ்லாம் மதம் சமாதானத்தையே வலியுறுத்துகின்றது. இலங்கையில் முஸ்லிம் மக்கள் ஏனைய சமூகத்தவருடன் அந்நியோன்னியமாக வாழ்ந்து வருகின்றனர்.

இத்தேசத்தில் சமய நல்லுறவு பேணப்படுகின்றது. வடமாகாணத்தில் முஸ்லிம் மக்கள் ஒரு சிறு தொகையினராக இருந்தாலும் அவர்கள் தமது பூர்வீக இடங்களான யாழ்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இப்போது மீளக்குடியமர்ந்துள்ளனர் எனவே இம்முறை முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் ரம்ழான் பெருநாள் கொண்டாட வசதி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமையை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்த பெருமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சார்ந்ததாகும்

அவருடைய தொலை நோக்கு தலைமைத்துவம் இதற்கு வழி வகுத்தது என்று கூற வேண்டும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.குருநகர் வடக்கு கடற்கரை வீதிக்கு மின்சாரம்



(யாழ்ப்பாணம்)

கடந்த 23 வருடங்களாக யுத்தத்தின் பிடியில் பாதிப்படைந்த குருநகர் வடக்கு புதிய கடற்கரை வீதிக்கான மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 28 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இவ்வீதி திறந்து வைக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்தப் பகுதிக்கான மின் இணைப்பு வழங்கப்படாத நிலையில் தமக்கான மின்சார வசதியை பெற்றுத் தருமாறு அப்பகுதி மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததற்கு அமைய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால இப் பகுதிக்கான மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்விணைப்புப் பணிகள் யாவும ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாண அமைப பாளர் றீகனின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டு இப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டுசந்நிதியான் ஆச்சிரமத்தில் தினமும் காலை 10 மணிக்கு விசேட சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று "முருகன் பெருமை" என்னும் விடயம் பற்றி யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் ஜே.சந்திரப்பிரகாசம் சொற் பொழிவாற்றவுள்ளார். (01)

# நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருட்டு

(சாவகச்சேரி)

கல்வயல் விளைவேலி தோட்டப் பகுதியில் இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த சனியன்று இரவு இவ்விரு இயந்திரங்களும் அதன் குழாய்களும் இலாவகமாக திருடப்பட்டுள்ளன.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது கடந்த சனிக்கிழமையன்று விளைவேலி துர்க்கையம்மன் ஆலய திருவிழா இடம்பெற்றது.

இதற்கு அப்பகுதிமக்கள் சென்றுள்ளனர். சிலர் வீட்டிலும் இருந்துள்ளனர். தோட்ட வெளியில ஆள் நடமாட்டம் இல்லாத வேளையில் குழாய்கள் அறுக்கப்பட்டு இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களும் திருடப்பட்டுள்ளன.

விக்னேஸ்வரன் என்பவரது நீர் இறைக்கும் இயந்திரம் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்ததாகவும் கதிரவேலு என்பவரது நீர் இறைக்கும் இயந்திரம் சிறுக்குளத்தில் பொருத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்களவு தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (இ)

## பட்டப்படிப்பு அனுமதிப் பரீட்சை

யாழ.பல்கலைக்கழக வவுனியா வளாகத்திற்கும் இலங்கை ரஜரட்டை பல்கலைககழகத்துக்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞான மாணி பட்டப்படிப்பு 2012 / 2013 கல்வியாண்டுக்கான அனுமதிப்பதிப்பதற்கான பொது உளச் சார்பு பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை ஆங்கில மொழி மூலம் மட்டும் நடைபெறவுள்ளதுடன் விண்ணப்பிப்போர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கைந்நூல் 2012/2[illegible] (பக்கங்கள் 29,30) பகுதி 8,4,6, இல் பட்டியலிடப்பட்ட மேலதிக தகமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னதாக சிரேஷ்ட உதவிப்பதிவாளர், பரீட்சை மற்றும் கல்விப் பகுதி, இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும் அத்துடன் கடித உறையின் இடது புறமேல் மூலையில் ICT.Aptitude Test 2012/2013 என்று குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களை வவுனியா வளாகத்தின் இணையத்தளமான www.vau.jfn.ac.lk ரஜரட்டை பல்கலைக்கழக இணையத்தளமான www.rjt.ac.lk என்ற முகவரியிலும் பார்க்க முடியும் என பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கே.கே. அருள்வேல் தெரிவித்துள்ளார்.



வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் கல்வித் திணைக்களத்தில் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி தலைமையில் மாபெரும் இப்தார் வைபவம் இடம்பெற்றபோது கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன் உரையாற்றுவதையும் வருகை தந்த மதகுருமார்களையும், படத்தில் காணலாம். (105)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2450 திகதி 07-08-2013

ஆங்கில எழுத்து: C

வெற்றி எண்கள்: 38 52 59 68

போனஸ் இல: 70

ஜக்பொட் பரிசு ரூ.20,045,125/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 250807 | 20/- | 5,016,140/- |
| 2 இல | 17906 | 100/- | 1,790,600/- |
| 3 இல | 359 | 1,000/- | 359,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9641 | 40/- | 385,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 711 | 1,000/- | 711,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 19 | 10,000/- | 190,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,045,125/- | - |
| 1 இல + போனஸ் இல | 11906 | 100/- | 1,190,600/- |
| 2 இல + போனஸ் இல | 552 | 500/- | 276,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 526 | 200/- | 105,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 292455 | | 11,655,680/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2013 ஓகஸ்ட் 10 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 20,728,425/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 தொ.பே: 2333546/7

(C/2979)


# அடையாள அட்டை பெறுவதற்கு கோப்பாயில் நடமாடும் சேவை

(கோப்பாய்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கபே அமைப்பின் அனுசரணையுடன் வரும் 2013.08.13 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்தில் தேசிய அடையாள அட்டைக்கான நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

கபே அமைப்பின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந் நிகழ்வில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நடமாடும் சேவையில் அடையாள அட்டைக்கு புதிதாக விண்ணப்பித்தல், தொலைந்தமைக்கான விண்ணப்பங்கள் மற்றும் பழுதடைந்த அல்லது திருத்தத்திற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் உட்பட இதற்குத் தேவையான சகல ஆவணங்களையும் தயார்படுத்தி வைக்குமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் பொலிஸ் அறிக்கை, சத்தியக்கடதாசி, புகைப்படம், முத்திரை என்பனவும் அன்றைய தினம் இலவசமாக பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அரச உத்தியோகத்தர் மற்றும் ஓய்வூதியர்களிற்கான விசேட கருமபீடமும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்ட குற்றத்திற்காக பருத்தித்துறை நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 34 மீனவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மீனவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.



இவ்விடயம் தொடர்பான வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதிநந்தசேகரன் இம்மீனவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (116)

# கரைச்சி மாற்று வலுவுள்ளோர்களுக்கு நலனோம்பு அட்டை வழங்கும் திட்டம்

## 2 ஆம் கட்டம் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் மாற்று வலுவுள்ளோர்களுக்கு சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தின், இரண்டாம் கட்டம் எதிர்வரும் 12, 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி. கேதீஸ்வரன், வட மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. நளாயினி இன்பராஜ் ஆகியோரின் வழிகாட்டலில் கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இதற்கான வேலையை செய்யவுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன் தலைமையில் இப் பணிகளில் ஈடுபட உள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோர் அனைவரும் ஏற்கனவே 4 பக்க படிவம் நிரப்பி பதிவு செய்யப்பட்டுள்ளனர். பதிவு செய்யாமல் தவறவிடப்பட்டோரும் இந்த வேலைத் திட்டத்தில் பதிவு செய்யப் படவுள்ளனர்.

மாற்றுவலுவுள்ளோர் அனைவரும் இலவசமாக புகைப்படம் எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட உள்ளனர். பின்னர் சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்காக அவர்கள் தமது குடும்ப அட்டை, அடையாள அட்டை சகிதம் அறிவிக்கப்படும் இடங்களில் உள்ள கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு உரிய நேரத்தில் சமூகமளிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைத் திட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைசசின் கிராம வெளிக்கள உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர், சமூக சேவைத் தொண்டர்கள் ஆகியோரும் கிராம அலுவலருடன் இணைந்து பணியாற்ற பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் வகை செய்துள்ளார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 11 மணிவரை கனகபுரம் கிராம அலுவலர் பிரிவிலும், அதேதினம் காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் செல்வாநகர் கிராம அலுவலர் பிரிவிலும், பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணிவரையும் அம்பாள்குளம் கிராம அலுவலர் பிரிவிலும் நடைபெறவுள்ளது.

15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரையும் உருத்திரபுரம் வடக்கு கிராம அலுவலர் பிரிவிலும், காலை 11 மணி முதல் பிற்பகல் 1 மணிவரையும் உருத்திரபுரம் மேற்கு கிராம அலுவலர் பிரிவிலும், பிற்பகல் 1 மணி முதல் மாலை 4 மணி வரையும் சிவநகர் கிராம அலுவலர் பிரிவிலும் நடைபெறவுள்ளது.

இந்த நேரஒழுங்கில் மாற்று வலுவுள்ளோரைச் சமூகமளிக்குமாறு பிரதேச செயலரால் அறிவிக்கப்பட்டுள்ளது. நேரடியாக சமூகமளிக்க முடியாத மாற்றுவலுவுள்ளோருக்கு வீட்டில் சென்று உரிய அதிகாரிகளால் புகைப்படம் எடுக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளில் இம் மாதம் 22, 23 ஆம் திகதிகளில் இவ் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது. அது பற்றிய நேர அட்டவணை பின்னர் அறிவிக்கப்படுமென பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (90)

## சாவற்கட்டுப் பகுதியில் சுதந்திரக்கட்சி அலுவலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு நாளை சனிக்கிழமை விஜயம் செய்யவுள்ள கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிளை அலுவலக மொன்றைத் திறந்து வைக்கவுள்ளார்.

அன்றையதினம் பிற்பகல் 5.00 மணியளவில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படுவதுடன், இந்நிகழ்வில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு ஆனைக்கோட்டை சாவற்காடு மக்களால் அமைச்சரின் படத்துடன் கூடிய துண்டுப்பிரசுரமும் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அன்றைய தினம் யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் அன்றைய தினமும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடற்றொழில் நீரியல்வள அமைச்சின் அனுசரணையின் கீழ் பல்வேறு கட்டடங்களைத் திறந்து வைக்கவுள்ளதுடன், மீனவர் குடும்பங்களுக்காக மீன்பிடி உபகரணங்களையும் வழங்கி வைககவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## வகுப்பறை மேம்பாட்டுத் திட்டத்திற்கு யுனிசெவ் நிதி ஒதுக்கீடு

(அச்சுவேலி)

பிள்ளைநேயப் பாடசாலைகளின் வகுப்பறை மேம்பாட்டுத் திட்டங்களுக்காக யுனிசெவ் நிறுவனத்தினால் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்டதைப் போல் இவ்வருடமும் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

பின்தங்கிய பிரதேசங்கள் மற்றும் வகுப்பறை கவின்நிலை வசதிகள் குறைவான பிள்ளைநேயப் பாடசாலைகளின் வகுப்பறைகளினை மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற கவின் நிலையுடையதாக மாற்றுவதற்காக இவ்வருடமும் யுனிசெவ் நிறுவனத்தினால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி நிதியானது உரிய பாடசாலைகளின் வங்கிக் கணககுகளில் இடப்பட்டுள்ளமையினால் இது தொடர்பான வேலைத்திட்டங்களை உடனடியாகவே ஆரம்பித்து நடைமுறைப்படுத்துமாறும் அப்பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் வகுப்பறைகளை வர்ணம் தீட்டி அழகுபடுத்துதல், வகுப்பறைத் திருத்த வேலைகள், குழாய் நீர்விநியோகத் தொகுதிகளிலுள்ள திருத்தங்கள், சிறுவர் பூங்காக்களை மறுசீரமைத்தல் மலசல கூட திருத்தங்கள் போன்ற அவசர திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியும் எனவும் வேலைத்திட்டங்களின் பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகளின் உதவிகளும் அவசியம் எனவும் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03)



கீரிமலையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் சிவபூமி யாத்திரிகர் விடுதியின் தோற்றத்தைக் காணலாம். (54)

## வருடாந்த மஹோற்சவம்

(கோண்டாவில்)

கோண்டாவில் மேற்கு, கந்தர் வளவு ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிககு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 18 ஆம் திகதி மாலை 7 மணிக்கு சபபறத் திருவிழாவும், 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 20 ஆம் திகதி காலை 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், மாலை 5 மணிக்கு வசந்த மணடபப் பூசையும் மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. 21 ஆம்திகதி மாலை 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (120)

## நீதிமன்றச் செய்திகள்

(மல்லாவி)


✶ மல்லாவி யோகபுரம் பகுதியில் வீடு ஒன்றினுள் புகுந்து காட்டுக்கத்தியால் கையை வெட்டிக் கடும்காயம் ஏற்படுத்திய நபருக்கு 6 மாத கடூழியச் சிறையும், பாதிக்கப்பட்ட நபருக்கு 30 ஆயிரம் ரூபா நட்டஈடு செலுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

✶ ஒட்டுசுட்டான் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மாடு ஒன்றினை கொலை செய்து இறைச்சியை தனது உடமையில் வைத்திருந்த நபர் ஒருவருக்கு 6 மாத கால சாதாரண சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கைப்பற்றிய மாட்டிறைச்சியை அழித்துவிடுமாறும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

✶ முல்லைத்தீவு வற்றாப்பளை பகுதியில் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான பாலை, முதிரை மரங்களை வெட்டி கடத்த முற்பட்டவேளை கைது செய்யப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த இரு நபர்களுக்கு ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் மரங்களைப் பறிமுதல் செய்து மரக்கூட்டுத்தாபனத்துக்கு கையளிக்குமாறு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

✶ வற்றாப்பளை பகுதியில் அனுமதிப்பதிரமின்றி மணல் ஏற்றிய நபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. கட்டத்தவறின் 8 மாதம் சாதாரண சிறைத்தண்டனையையும் விதிக்குமாறு மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (170)

# அகிலத்தை தோற்றுவித்த அன்னைக்கு இன்று ஆடிப்பூர விழா



அன்னையின் அருள் பெறும் தினங்களாக ஆடிப்பூரம், ஆடிச் செவ்வாய், நவராத்திரி என்பன விளங்குகின்றன. இதில் ஆடிப்பூரம் அன்னை பூப்பெய்திய நாளாக விளங்குகின்றது. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் தோற்றுவித்தவள் அன்னை பராசக்தி.

அண்ட சராசரங்கள் அனைத்தையுமே தோற்றுவித்தமையையே அன்னை பூப்பெய்தியதாக தத்துவ விளக்கம் கொள்ளப்படுகின்றது.

உலக மாதாவாகிய உமாதேவியார் ருதுவாகிய தினமான இத்தினம் அம்பாள் விரதத்திற்கும், தரிசனத்திற்கும் உகந்த நாளாகும். அம்பாளின் எட்டு வகைச் சித்திகளையும் பெற இந்நாள் வழிபாடு உன்னதமானது.

இத்தினத்தில் அம்பாள் சன்னிதானங்களில் அன்னையை அலங்கரித்து ஆராத்தி விசேட வழிபாடுகள் நடைபெறும். முக்கியமாக பொங்கல் கழி அன்றைய நிவேதனப் பொருளாக விளங்கும். அன்னையின் அருட்கடாட்சத்தைப் பெறுவதற்காக ஆலயங்களில் பெண்கள் நிறைந்து காணப்படுவார்கள். எல்லாப் பெண்களுக்கும் அன்றைய தினம் குங்குமப் பிரசாதம் கொடுக்கப்படுவது வழமை.

இந்நாளில் சைவ ஆலயங்களில் மட்டும் அன்றி விஸ்ணு ஆலயங்களிலும் சிறப்பான பூசை வழிபாடுகள் இடம் பெறுகின்றன. இதற்கு காரணமான கதையும் உள்ளது.

அன்னை பெரியாழ்வாரின் நந்தவனத்தில் துளசிச் செடியருகே பெண் குழந்தையாக அவதரித்தது ஒரு ஆடிப்பூர நன்னாளிலேயே பூமியில் அவதாரம் செய்தமையால் கோதை எனப் பெயர் பெற்றாள். கோதை சூடிக்கொடுத்த பூமாலைகளை ஸ்ரீரங்கநாதன் அணிந்து அவளை ஆட்கொண்டதால் ஆண்டாள் எனப்பட்டாள்.

நாராயணன் நம்பி செம்மையுடைய திருக்கையால் தான் பற்றி "அம்மிமிதக்கக் கனாக்கண்டேன் தோழி நான்" என அரங்க நாதனையே சேவித்து அவனுடன் இரண்டறக் கலந்து ஐக்கியமானாள் ஆண்டாள். அவள் பாடிய திருப்பாவை, நாச்சியார் திருமொழியாகவும் ஆனமாக்களினைப் பிறவிப் பெருங்கடலிலிருந்து முததிபெறச் செய்வன. அதனால் ஆடிப்பூர நன்னாளில் விஷ்ணு ஆலயங்களிலும் சிறப்பான அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகினறன.

எனவே, ஆடிப்பூர நன்நாளில் உலக உயிர்களை எல்லாம் தோற்றம் பெறச் செய்பவளாகிய ஆதிபராசக்தியான அன்னை பராசக்தியையும், விஸ்ணுவையும் உள்ளன்போடு வணங்கி வரும் கஷ்டங்கள் யாவும் நீங்கி உள்ளத்தில் பேரொளி பிறக்கும் என்பது இந்து மக்களின் நம்பிக்கையாகும்.

ஆசிரியர் : சச்சி தவநேசன்

நீ எப்போது யாருமற்ற ஏழை, எளியவர்களுக்கு உதவுகிறாயோ, அப்போது ஆண்டவன் உன்னிடம் 'கடன்காரன்' ஆகிறான். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## போதும் அவர்களது நாடகம்!

முன்னேற்றத்திற்காக இளைஞர்களைக் கனவு காணும் படி அழைத்தார் இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம். குறைந்தபட்சம் அந்த இளைஞர்களுக்கான எதிர்காலத்தை அமைத்துத் தரும் பொறுப்பை வேண்டி நிற்கிற பிரதிநிதிகளுக்காவது அத்தகைய வளமான எதிர்காலத்தை உருவாக்கும் கனவு கட்டாயமாய் இருக்க வேண்டும்.

உணர்ச்சிகரமாகப் பேசி தமிழ் இளைஞர்களைப் போருக்குத் தூண்டிவிட்டு, தங்கள் பிள்ளைகளை மட்டும் வெளிநாடுகளில் தங்கிப் படிக்கவிட்டு சொகுசு அரசியல் செய்வோரிடம் நாம் திரும்பத் திரும்ப ஏமாந்து கொண்டிருக்கக் கூடாது. நமது எதிர்காலத்தை சுபிட்சமாக மாற்றுதலையும், அரசியலுரிமைகளைப் படிப்படியாக அடைந்து கொள்ளுதலையும் சமமாகக் கருதிச் செயற்படுபவர்களே நமக்குத் தலைவர்களாக வேண்டும்.

அந்தவகையில் இந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் இளைய வேட்பாளர் ஒருவர் இளைஞர்களுக்கு விடுத்திருக்கும் அழைப்பு நம் கவனத்தைக் கவர்வதாக அமைகிறது. இளைஞர்கள் மட்டுமல்லாது முழு சமூகமுமே கவனத்தில் கொள்ள வேண்டிய அந்த அழைப்பிலிருந்து ஒரு சிறு பகுதியை முக்கியத்துவம் கருதி கீழே தருகிறோம்:

1980கள் வரையில், இலங்கையின் 9 மாகாணங்களில், தலைநகர் கொழும்பு அமைந்துள்ள மேல்மாகாணத்துக்கு அடுத்த நிலையில் கல்வியிலும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்கிய வடக்கு மாகாணம், இன்றைக்கு இரண்டிலுமே 9வது இடத்துக்குத் தாழ்ந்துபோயுள்ளது. யாழ்ப்பாணத்து இளைஞர்கள் என்றால் கல்வியில் சிறந்தவர்கள் என்ற நிலை போய், கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றாக யாழ்ப்பாணத்தைக் கணிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

போதிய கல்வி வாய்ப்புக்கள் இன்றி, தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல், திருப்தியான வருமானமீட்டி மனதுக்குப் பிடித்தமான வாழ்க்கையை வாழ முடியாமல் தினமும் மனதுக்குள் புழுங்கியபடி வாழுமாறு நாங்கள் விதிக்கப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு, கல்வியில் பின்தங்கி, தொழில்வாய்ப்புக்களின்றி, வசதியான வாழ்க்கையை வாழ முடியாமல் ஒதுங்கிப்போய் இருக்கும் எம்மைப் பார்த்து, காவாலிகள், பியர் அடிக்கிறார்கள், கலாசார சீரழிவில் ஈடுபடுகிறார்கள் என்று, நாம் இந்த நிலைக்கு ஆளாகக் காரணமானவர்களே வெட்கமில்லாமல் எம்மைப் பார்த்து குற்றச்சாட்டுக்களை வீசி எறிகிறார்கள்.

கல்வி, தொழில், பொருளாதார மேம்பாடு, வாழ்க்கை வசதிகள் என்று பலவற்றுக்கும் நாம் ஏங்கிக்கொண்டிருக்க, அவற்றைப் பெறுவதற்கு வழிகாட்டாது, மீண்டும் மீண்டும் 50 வருடங்களுக்கு முன்னர் தாம் செய்த அதே அரசியலையே செய்துகொண்டு, எம்மையும் அதற்குப் பின்னாலேயே இழுத்துவிட முயல்கிறார்கள்.

1987இலேயே கிடைத்த மாகாணசபை முறைமையை வேண்டாம் என்று உதறித்தள்ளிவிட்டு, மீண்டும் மீண்டும் இளைஞர்களை படுகளம் அனுப்பிக்கொண்டிருந்தவர்கள், இன்று வரிந்து கட்டிக்கொண்டு கதிரைப்போட்டி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

தங்களுடைய பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கை வாழ வழிசெய்துவிட்டு, எங்களுக்கான வீதி அபிவிருத்தி, புகையிரதப் பாதை, அபிவிருத்திப் பணிகளை அற்ப சலுகைகள் என்று கூற இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?

போதும் இந்த நாடகம்! எமக்கு வேண்டிய ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொள்ளும் பொறுப்பை இனி நாமே எமது கைகளில் எடுப்போம்.

இந்தத் தடவை, 60 வருட கால தமிழ் மக்களின் போராட்டத்தின் பின்னர் எங்களுக்கு மிஞ்சிக்கிடக்கும் இந்த மாகாணசபை முறைமையைப் பயன்படுத்தி எமது வாழ்க்கையை மேம்படுத்தக் கூடிய உண்மையான அர்ப்பணிப்பு மிக்கவர்களிடம் அதைக் கையளித்து முன்னோக்கிச் செல்வோம். – ஆசிரியர்

# இலங்கையின் உண்மை நிலையை அறிய பொதுநலவாய மாநாடு சிறந்த வாய்ப்பு

## பிரிட்டனுக்கான உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் உண்மை நிலைமைகளை பார்வையிடுவதற்கு பொதுநலவாய நாடுகளின தலைவர்கள் அமர்வினைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனீஸ் தெரிவித்துள்ளார்.

உலகத்தலைவர்கள், வெளிவிவகார அமைச்சர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோருக்கு நாட்டின் மெய்யான நிலைமைகளை நேரில் கண்டுகொள்ள இந்த அமர்வு சிறந்த வாய்ப்பாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் வர்த்தக மாநாட்டுக்கான முன்னோடி நிகழ்வில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வு லண்டனில் நடைபெற்றது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் இலங்கை சமாதானத்தை எட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

# தயாசிறியை தேசிய அரசியலுக்கு கொண்டு வந்தவன் நானே!

## என்கிறார் ரணில்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தனக்கும், கட்சிக்கும் எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுக்களை நிராகரித்த ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்ரமசிங்க, தயாசிறியை நானே தேசிய அரசியலுக்கு கொண்டுவந்தேன் என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரணில் விக்ரமசிங்க தொடர்ந்து உரையாற்றுகையில், கட்சி தாவுவதற்காக ஜயசேகர ஒருவருடத்திற்கு மேலாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திவந்தார் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

கட்சி மாறினாலும் ஒரு அமைச்சர் பதவியை பெறுவது கடினமானதாக இருந்தமையினால் வடமேல் மாகாண சபைத்தேர்தலில் முதலமைச்சராக போட்டியிடும் நோக்கில் பேச்சுவார்த்தையை அரசாங்கத்துடன் ஆரம்பித்தார். அதற்காக சட்டத்திற்கு அமைவாக அவர் நாடாளுமன்ற பதவியை இராஜினாமா செய்தார்.

அரசாங்கத்துடன் இவர் இரகசியமாக பேசிக்கொண்டிருந்தமையினால் ஐக்கிய தேசியக்கட்சியின் தொழிற்சங்கமான ஜாதிக சேவா சங்கத்திற்கு ஜயசேகரவை தலைவராக தான் நியமிக்க முயன்றபோது கடும் எதிர்ப்பு ஏற்பட்டது என்றும் அவர் கூறினார்.பின்னர் ஜயசேகர தான் ஐக்கிய தேசியக்கட்சியைவிட்டு விலகபோவதில்லை என பகிரங்கமாக அறிவித்தல் ஒன்றை விடுத்தார். இதனால் நாம் அவருக்கு ஒரு வாய்ப்பைக்கொடுத்தோம். கட்சி மாநாட்டை விமர்சித்தமையினால் இவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனி னும், தனது உரையை ஊடகங்கள் பெரிதாக்கிவிட்டன என்று கூறினார். எனினும், ஒழுக்காற்றுக்குழு அங்கத்தவர்களுடன் பேசிய ஜயசேகர தனது அறிக்கைக்காக வருந்துவதாகத் தெரிவித்தார் என்றும் ரணில் விக்ரமசிங்க மேலும் கூறினார்.

# பல்தேசிய நிறுவனங்களால் பாதிக்கப்படும் சுகாதாரத்துறை

(கொழும்பு)

நாட்டில் இயங்குகின்ற சில பல்தேசிய நிறுவனங்கள் காரணமாக, சுகாதாரத்துறை பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக, சுகாதாரத்துறை அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

குருநாகல் தாதியர் பயிற்சி பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார். சுகாதாரத்துறை தற்போது பாரிய விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத்துறையின் சிறந்த விடயங்களை விடுத்து, குறைபாடுகளே முதன்மைபடுத்தப்படுகின்றன.

சுகாதாரத்துறை சார்ந்த அனைவரும் இதனால் பாரிய அழுத்தங்களுடன் பணியாற்றவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.பால்மா நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள், மதுபான நிறுவனங்கள் போன்றன, சுகாதாரத்துறைக்கு பாரிய சவாலாக காணப்படுகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# அச்சுறுத்தி பணம் பறித்துவரும் முன்னாள் காதலன் மீது முறையீடு

(யாழ்ப்பாணம்)

தன்னை அச்சுறுத்தி தொடர்ச்சியாகப் பணம் பெற்றுவருவதாக பெண்ணொருவர் தனது முன்னாள் காதலன் மீதும் அவரது மனைவி மீதும் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.


யாழ். பொலிஸ் நிலையத்திலேயே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ். நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த இளைஞனும், குறித்த யுவதியும் நீண்ட காலமாக காதலித்து வந்துள்ளனர். பின்னர் காதலன் வேறு ஒரு பெண்ணையும், காதலி வேறு ஒரு ஆணையும் திருமணம் முடித்துக் கொண்டுள்ளனர். இவ்வாறு இருவரும் வேறு திருமணம் முடித்த பின்னர் அந்தப் பெண்ணின் முன்னாள் காதலனும், அவரது மனைவியும் சேர்ந்து குறித்த பெண்ணை அச்சுறுத்தி வந்துள்ளனர்.

எனது கணவனுடன் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை பேஸ்புக்கில் வெளியிடுவோம் என்று முன்னாள் காதலனின் மனைவியும் இது தொடர்பில் உனது கணவனுக்கும் தெரியப்படுத்துவோம் என்று அவளது முன்னாள் காதலனும் அந்த பெண்ணை அச்சுறுத்தி பெரும் தொகையான பணத்தினை அவளிடமிருந்து இருவரும் பெற்று வந்துள்ளனர்.

இவ்வாறு பல தடவைகள் குறித்த பெண் பணத்தினை கையளித்து வந்த நிலையில், முன்னாள் காதலனதும் அவரது மனைவியின் அச்சுறுத்தலும் தொடர்ந்து கொண்டே சென்றுள்ளது. அதனை பொறுத்துக்கொள்ள முடியாத அந்தப்பெண் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த இளைஞனையும் அவரது மனைவியையும் யாழ்.பொலிஸ்நிலையத்திற்கு அழைத்த யாழ்.பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தி இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாமென அறிவுரை வழங்கியுள்ளனர். குறித்த இளைஞர் பல பெண்களை காதலித்து, அவர்களை ஏமாற்றி வந்ததுடன், அவர்களை அச்சுறுத்தி பணம் பெற்றுவந்துள்ளதாகவும், பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (25)



# இன்பப் பெருநாளாம்! ஈகைத் திருநாளாம்!

**புனித** ரமழான் பூராவும் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாதத்தின் தலைப்பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளைக் குதூகலமாகக் கொண்டாடுகின்றனர். "அல்லாஹு"அக்பர் அல்லாஹு" அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹு" வல்லாஹு" அக்பர், அல்லாஹு" அக்பர் வலில்லாஹில் ஹம்து" என்ற தக்பீரை முழங்கி அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து போகின்றார்கள்.

இறை அருளையும் பாவ விமோசனத்தையும் அடைய நேற்றுவரை தூன் டிக்கொண்டிருந்த ரமழான் எனும் விசேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பிவைத்து கவலையில் ஆழ்ந்த விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும், மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்புமிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.

ரமழானில் நன்மைகளை கொள்ளையிட்ட உள்ளங்கள் ஷவ்வால் மாத தலைப்பிறையுடன் ரமழானுக்கு விடைகொடுத்து விட்டு நோன்புப் பெருநாள் குதூகலத்தில் திளைக்கின்றன.

பெருநாள் தினம் என்பது சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரன், முதியவர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி மகிழ்ச்சியுடன் களிக்கக் கூடிய தினமாகும். இப்பெருநாள் தினத்தில் நோன்பு நோற்றுவதை ஹறாமாக்கி உள்ள இஸ்லாம் அல்லாஹ்வின் உவப்புக்குரிய வழிகளில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது.

பெருநாள் தினம் அல்லாஹ்வை ஞாபகமூட்டக்கூடிய அவனைப் புகழக் கூடிய தினமாக இருக்க வேண்டுமே தவிர நற்செயல்களுக்கு மூட்டை போடும் தினமாக அமையலாகாது.

ஈதுல் பித்ர் பெருநாளில் அதிகமானளவு நன்மைகளைச் செய்யநாம் முன்வர வேண்டும். நாம் மட்டும் பெருநாளைக் கொண்டாட அயல் வீட்டார் பெருநாளைக் கொண்டாட வசதி அற்றவனாக இருப்பானேயானால் நாம் கொண்டாடும் பெருநாளில் என்ன தாற்பரியம் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

## ஈதுல் பித்ரே வருக வருக

அல்ஹாஜ் எம். எப். எம். இக்பால்
யாழ்ப்பாணம்

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது தர்மம் பித்ராகொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின் போது ஏற்பட்ட தவறுகளுக்குப் பரிகாரமாகவும், ஏழை எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியுடன் இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையில்

## இன்று ரமழான் பெருநாள்


கடமையாக்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் முஸ்லிம்களின் பெருநாள் தினம் தனித்துவமானதாயும் முன்மாதிரியானதாகவும் அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. இன்று நம்மில் சிலர் பெருநாள் தினத்தில் இஸ்லாம் அனுமதித்தது, அனுமதிக்காதது என்ற நிலைப்பாட்டிற்குஅப்பால் நின்றுஷரீஆ அனுமதித்ததற்கு மாற்றமான முறையில் பெருநாளைக் கொண்டாடி வருகின்றனர். மாற்று மதத்தினரின் கொண்டாட்டங்களில் இடம்பெறும் சம்பிரதாயங்களையும் நிகழ்வுகளையும் அப்படியே நம்மில் சிலர் உள்வாங்கியவர்களாக பெருநாளைக் கொண்டாட முயலுகின்றனர்.

இஸ்லாம் இம்மை, மறுமைப் பயன்களை அடைந்து கொள்ளக் கூடிய வழியில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது. நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் பள்ளிவாசலுக்குச் செல்லும் போது ஒருவழியால் சென்று மற்றுமொரு வழியால் .திரும்பி வருவார்கள். இதன் மூலம் பலரை சந்திக்கவும் ஏழைகளுக்கு உதவி புரியவும் கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள்.

பெருநாள் தினத்தில் வீண் கேளிக்கை விளையாட்டுகளைத் தவிர்த்து சகோதர மதத்தவர்களுடன் புரிந்துணர்வு கருதிய ஒன்று கூடல்களை நடத்தலாம். இதன் மூலம் இருசாரார் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயங்கள் நீங்கி பிரதேச மற்றும் தேசிய அமைதிக்கு வழியேற்படும்.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்த ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப்படுகிறது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பில் உள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போதுமான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளை உடைய ஒவ்வொரு முஸ்லிமும், இத்தகைய வசதிகளற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்குக் கட்டாயமாக கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படுவது.



பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழ வேண்டும். எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்தவான்களாக மாறுவதால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.

ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுக துக்கங்களில் பங்குபற்றக்கூடிய விதத்தில் அமைந்திருக்க வேண்டும். இந்த உண்மையை ஸாகாதுல் பித்ர் அமைப்பு முறையிலும் காணப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்துப் புத்தாடைகள் அணிந்து நறுமணம் பூசி அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதேபோன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்க வேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு. ஒரு ஊரில் அல்லது மஹல்லாவில் வாழும் முஸ்லிம்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாகப் பிரியாமல் சகலரும் ஒன்றுசேர்ந்து ஒரு திறந்த வெளியில் அல்லது மைதானத்தில், இது முடியாத போது ஒரு பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நடத்த வேண்டும்.


ஈதுல் பிதர் தொழுகை முடிந்தவுடன் இமாம் நிகழ்த்தும் குத்பா உரையை அனைவரும் கேட்க வேண்டும். தொழுகையைப் போன்றே குத்பாவும் ஒரு இபாதத் என்பதை மறக்கலாகாது. இவ்வாறு ஒரு இமாமுக்கு கட்டுப்பட்டு நடப்பதன் மூலம் முஸ்லிம் சமுதாய அமைப்பு வலுப்பெறுவதோடு தனிப்பட்ட ஒவ்வொரு முஸ்லிமும் பல வகையான நன்மைகளையும் அல்லாஹ்வின் அருளையும் பெறும் வாய்ப்பையும் பெறுகின்றனர். பெருநாள் தொழுகை முடிந்ததும் தான் சந்திக்கும் சகோதரர்களுக்கு "தகப்பல் வலல்லாஹு" மின்னி வமின்க", உங்களுடையவும் என்னுடையவும் நற்செயல்களையும் வாழ்த்துக்களையும் அல்லாஹ் அங்கீகரிப்பானாக என்று கூறி வாழ்த்து தெரிவிப்பது சுன்னத்தாகும்.

பெருநாள் தினங்களில் உறவினர்கள், நண்பர்கள், மார்க்க ஊழியர்கள் அனைவரையும் கண்டுபேசி உபசரித்து வாழ்த்துக்கூறி தங்களிடையே பற்றையும், பாசத்தையும், அன்பையும், ஆதரவையும் மென்மேலும் அதிகரித்துக் கொள்வதும் சிறந்த செயலாகும்.

எமது தாய் நாடான இலங்கையிலும் எனைய முஸ்லிம் சிறுபான்மை நாடுகளிலும் நிலவும் பயங்கரமான பிரச்சினைகளிலிருந்து நீங்கி சமாதானமும் சக வாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத்தன்மையும், புரிந்துணர்வும் ஏற்படுவதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக.! ஆமீன். ஈத் முபாரக்!

# தாயகம் என்ற கோட்பாட்டின்படி மாகாண எல்லைகள் வரையறுக்கவில்லை

### அரசாங்கம் தெரிவிப்பு



தாயகம் என்ற கோட்பாட்டின அடிப்படையில் மாகாண எல்லைகள் வரையறுக்கப்படவில்லையென அரசாங்கம் தெரிவித்துள்ளது. காலணித்துவ காலத்திலிருந்தே இந்நிலை காணப்படுவதாக அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார். வாய்மூல வினாவொன்றுக்கு நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் மேல் மாகாணங்கள் 1833 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டவை. வடமேல் மாகாணம் 1845 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. வடமத்திய மாகாணம், 1873 ஆம் ஆண்டிலும், ஊவா மாகாணம் 1886 இலும், சப்ரகமுவ மாகாணம் 1889 இலும உருவாக்கப்பட்டன. எனினும் அவை தாயகம் என்ற கோட்பாட்டின் கீழ் உருவாக்கப்படவில்லையென அமைச்சர் தினேஸ் குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார். 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இணைந்த வடக்கு கிழக்கு மாகாணம் அமைந்தது. எனினும் 2006 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கமைய வடக்கு,. கிழக்கு மாகாணங்கள் பிரிகப்பட்டன. இந்நிலையில் நாட்டில் எந்தவொரு மாகாணமும் தாயகக்கோட்பாட்டின் கீழ் எல்லை நிர்ணயத்திற்கு உட்பவில்லையென அமைச்சர் தினேஸ் குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணி ஆரம்பம்

மாகாணசபைத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளன. வடக்கு, வடமேல் மற்றும் மத்திய, மாகாணங்களுக்கான மாதிரி வாக்குச்சீட்டு, நேற்று முன்தினம் தேர்தல்கள் செயலகத்திலிருந்து கிடைத்ததாக அரச அச்சக பிரதானி லலித் டி சில்வா தெரிவித்துள்ளார். வடமேல் மாகாணத்தில் வாக்களிப்பதற்காக 17 இலட்சத்து, 54 ஆயிரத்து, 218 பேர் தகுதி பெற்றுள்ளனர். மத்திய மாகாணத்தில் 18 இலட்சத்து, 89 ஆயிரத்து 557 பேர் தகுதி பெற்றுள்ளனர். வடமாகாணத்தில் 7 இலட்சத்து, 83 ஆயிரத்து 770 பேர் வாக்களிக்கத் தகுதி பெறறுள்ளனர். இதற்கமைய குறித்த எண்ணிக்கையிலான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்படவுள்ளதாக அரச அச்சக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# இலங்கை வருகிறார் ஜப்பானிய இளவரசி

ஜப்பானிய இளவரசர் தக்க மடோ மற்றும் இளவரசி தக்க மடோ ஆகியோரின் மூத்த மகளான 27 வயதான இளவரசி சுகுக்கோ இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார்.

எதிர்வரும் 19 ஆம் திகதி இலங்கை வரும் அவர் 23 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

இலங்கையில் நடைபெறவுள்ள மிகப் பெரிய பாரம்பரிய திருவிழாவான பெரஹெர திருவிழாவைக் காணும் விருந்தினராக அவர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக ஜப்பானிய ஊடகங்கள் தெரிவித்தன.



இளவரசி சுக்குகோ இ[illegible] வருடம் ஜப்பான் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது பாரியாரையும் சந்தித்திருந்தார்.

# சம்பூர் மின் உற்பத்தி நிலைய உடன்படிக்கையில் குறைபாடு

### என்கிறார் அமைச்சர் சம்பிக்க



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சம்பூர் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் தொடர்பான உடன்படிக்கையில் குறைபாடுகள் இருப்பதாக முன்னாள் மின்வலு எரிசக்தி அமைச்சரும், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சித் துறை அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

"அமைதியான மரணத்திற்கு பாதை அமைக்கும் விஷங்கள் நிறைந்த உணவு" என்ற தலைப்பில கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பூர் உடன்படிக்கையின் மூலம் இலங்கையின் மின்சார பாவனையாளர்களுக்கு பெரும் நஷடம் ஏற்படும் என்றார்.

அதேவேளை சம்பூர் நிலக்கரி மின்சார உற்பத்தித் திட்டத்திற்கு இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களம் அனுமதியளித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

திருகோணமலை சம்பூர் பிரதேசத்தில் இந்த மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிக்க ஆறு வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்தியாவின் அனல் மின் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியன 50 வீத பங்குகளை கொண்டுள்ள இந்தத் திட்டத்திற்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மின்சார நிலையத்தில் 500 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இங்கு உற்பத்தி செய்யும் மின்சாரத்தை கொள்வனவு செய்ய இந்தியா தயாராகி வருவதுடன் அதற்கும் இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து கடல் வழியாக கேபிள இணைப்பின் ஊடாக தமிழகத்தின் மதுரைக்கு மின்சாரம் விநியோகிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

# மத்தளவிமான நிலையத்தில் பழுதுபார்த்தல் பணிகள்

ஜேர்மனின் உதவியுடன் பிராந்தியத்துக்கான விமான பழுது பார்த்தல் நிலையம் ஒன்றை மத்தள விமான நிலையத்தில் அமைக்கவுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நேற்று அறிவித்துள்ளது.

ஜேர்மனின் லுப்தான்சா விமான நிறுவன உதவியுடன் 209 மில்லியன் அமரிக்க டொலர் முதலீட்டுடன் இந்தப்பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அடுத்த யூலை மாதம் முதல் இந்தப்பணிகள் ஆரம்பமாகும் என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அறிவித்துள்ளது.

இது தொடர்பான இறுதிக்கட்ட பேச்சுக்கள் இடம்பெறுவதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குறிப்பிட்டுள்ளது. சீன உதவியுடன் மத்தள விமான நிலையம் அமைக்கப்பட்டபோதும் அதற்கு சர்வதேச விமானங்கள் வருவதற்கு அச்சம் வெளியிட்டு வருகின்றன. இதனையடுத்தே அங்கு விமானம் பழுதுபார்த்தல் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

# பாதுகாப்புச் செயலர், இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகவேண்டும்

### பல்.கலை விரிவுரையாளர் ஒன்றியம் கோரிக்கை

பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவும், இராணுவத் தளபதி தயா ரட்நாயக்கவும் பதவிவிலக வேண்டுமென பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார். வெலிவேரிய சம்பவத்தின் காரணமாக அவர்கள் பதவி விலக வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அப்பாவிப் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் இதனால் குறித்த இருவரும் பதவிகளை இராஜினாமாச் செய்யவேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். வெலிவேரிய பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சித்ததாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளமை நகைப்பிற்குரியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு அமைச்சுக்களே பொறு[illegible] என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். போராட்டத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் ஏன் இராணுவத்தை ஈடுபடுத்தியது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத் தலையீடு இடம்பெறுகின்றமைக்கு மற்றுமொரு உதாரணமாகவே இதனைக் கருதவேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இரு கரங்களும் மற்றும் இரு கால்களும் ஒழுங்காக செயற்படாத நிலையில் தமது பெற்றோரின் தோள்களில் ஏறி தினமும் பாடசாலை சென்று க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவி கிசானி கல்ஹாரிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மடிக் கணனியொன்றைப் பரிசளித்தார். குருநாகல் மாவட்டத்திலுள்ள பொல்பிதிகம தேசிய பாடசலை மாணவியான இவர் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் தமது பெற்றோர் சகிதம் ஜனாதிபதியைச் சந்தித்தவேளையே ஜனாதிபதி இந்த மடிக்கணினியை கையளித்துள்ளார்.

# கொழும்பு துறைமுகத் திறப்புவிழாவில் தேசிய கீதம் இசைக்கப்படாதது ஏன்?

### சீனாவின் அழுத்தமா என கேட்கிறது ஐ.தே.க.

கொழும்பு தெற்கு துறைமுக ஆரம்பநிகழ்வுகளின் போது என்ன காரணத்திற்காக தேசிய கீதம் இசைக்கப்படவில்லை எனவும் இதற்கான விளக்கம் அளிக்கப்படவேண்டுமெனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா அரசிடம் கேட்டுள்ளார்.

தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டியது கட்டாயம் என்ற போதிலும், இந்த நிகழ்வின் போது தேசிய கீதம் இசைக்கப் படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சீன அழுத்தங்கள காரணமாக தேசிய கீதம் இசைக் கப்படவில்லையா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.


இந்த நிகழ்வின் போது இலங்கை தேசியக் கொடிகளை விட



வும் அதிகளவில் சீனத்தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். இதேவேளை இந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றது என அமைச்சர் அதாவுத செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

சில நிகழ்வுகளில் ஒரு தடவை தேசிய கீதம் இசைக்கப்படும் எனவும், அம்பாந்தோட்டை துறைமுக ஆரம்ப நிகழ்வின் போது இரண்டு தடவைகள் இசைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# குடிநீர்த் திட்ட நடைமுறைப்படுத்தலில் பிரதேச மக்களின் கருத்துக்கள் அவசியம்



(கிளிநொச்சி)

முழங்காவில் பிரதேசத்தின் நிலத்தடி நீரை பாதுகாப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் அதேவேளை குடிநீர்த் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது பிரதேச மக்களின் கருத்துகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படல் வேண் டும் என ஈ.பி.டி.பி யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் இடம்பெற்ற முழங்காவில் பிரதேசத்தின் நிலத்தடி நீரை பாதுகாத்தலும் பிரதேச குடிநீர் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில காலங்களுக்கு முன்னர் நன்னீர் பிரதேசமாக இருந்த முழங்காவிலின் ஒரு பகுதியும் அதனைச் சுற்றியுள்ள பல பிரதேசங்களும் இன்று உவராக மாறியுள்ளது. நாளுக்கு நாள் பிரதேசங்கள் உவராக மாறிவருகின்றமை தொடர்கிறது. அளவுக்கு அதிகமாக குழாய்க் கிணறுகள் அமைத்தமை,குடிநீர் பெறப்படுகின்ற இடங்களிலிருந்து அளவுக்கு அதிகமாக குடிநீரை பெறுகின்றமை உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் இதற்கு ஏதுவாக அமைந்துள்ளன.

எனவே முதலில் இந்தப் பிரதேசத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு பிரதேச மக்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் மக்களின் ஒத்துழைப்பின் ஊடாகவே எல்லா விடயங்களையும் சாத்தியமாக்கமுடியும்.

கிளிநொச்சியில் பல பிரதேசங்களில் குடிநீரப் பிரச்சினைகள் காலத்திற்குக் காலம் எழுந்த வண்ணமே உள்ளன. அவற்றைத் தீர்ப்பதற்கு பல செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தியும் நடைமுறைப்படுத்தியும் வருகின்றோம். அந்த வகையில் முழங்காவில் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களின் குடிநீர்ப் பிரச்சினையை தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக முழங்காவில், இராஜபுரம், இரணை மாதாநகர், குமுழமுனை, நாச்சிக் குடா போன்ற பிரதேசங்களின் குடிநீரப் பிரச்சினைக்கு விரைவில் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் தபேந்திரகுமார்,அதன் திட்டப்பொறியியலாளர் நிமலன், கிளிநொச்சி முல்லைத்தீவு பொறியியலாளர் சவீண்டன் டொன் போஸ்கோ, தொழிநுட்ப நிறுவனத்தின். இயக்குநர் அருட்தந்தை செபஸ்டீன் மற்றும் பிரதேச கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கிராமப்புற மாணவர்களுக்கு பாதணி வழங்கும் செயற்றிட்டம்

(அச்சுவேலி)

கிராமப்புற பாடசாலைகளில் பயின்று வரும் மாணவர்களிற்கு ஏற்படக்கூடிய பாதணிப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் கல்விச்சேவைகள் அமைச்சினால் மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கஸ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கல்வி கற்று வரும் மாணவர்களின் கற்றல் தேவைகளை நிறைவு செய்யும் செயற்பாட்டின் ஓர் அங்கமாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய தரம் 01 முதல் உயர்தரம் வரையான வகுப்புக்களில் கற்றுவரும் மாணவர்களின் பாதணி அளவுகளை எடுத்து அனுப்பி வைப்பதற்கு ஏதுவாக மேற்படி அமைச்சினால மாதிரி அளவீடுகளும் அனுப்பி வைக்கப்பட்டு அது தொடர்பான தரவுகள் கோரப்பட்டிருந்தன. இதற்கமைய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்ற பாடசாலை அதிபர்களினால் அது தொடர்பான தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (03)

# ஆடிப்பூர உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்மாள் ஆலய ஆடிப்பூர உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இதில் காலை 6 மணிக்கு ஸ்நபனாபிஷேகம்,மு.ப 10 மணிக்கு உற்சவ அம்பிகைக்கு சிறப்பு அபிஷேகத்தைத் தொடர்ந்து ஆடிப்பூர உற்சவம் நடைபெறும். (120)

# சம்பத் வங்கி மானிப்பாய் கிளையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா

(மானிப்பாய்)

சம்பத் வங்கியின் மானிப்பாய் கிளை மூன்றாம் ஆண்டு நிறைவு விழா கடந்த 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முகாமையாளர் இ.குமணன் தலைமையில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக சம்பத்வங்கி பிராந்திய முகாமையாளர் ப.சங்கர் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன் வர்த்தக பெருமக்கள்,பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வங்கியின் ஏற்பாட்டில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடாத்தப்பட்ட சித்திரப்போட்டியில் 'மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, 'மானிப்பாய் சிந்மய பாரதி பாடசாலை' 'மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம்' ,'மானிப்பாய் புனித ஆன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழக் கலவன் பாடசாலை' ஆகியனவற்றில் தரம் 1முதல் 4 வரை கல்வி பயிலும் 200இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இவற்றில் 03வெற்றியாளர்களும், 5 ஆறுதல் பரிசு வெற்றியாளர்களும், ஒவ்வொரு தரத்திற்கும் தனித்தனியே தெரிவு செய்யப்பட்டு வங்கிக்கிளையின் ஆண்டு விழா வைபவத்தின் போது பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். முதற்பரிசாக 5000/=வும், இரண்டாம் பரிசாக 3000/=வும் மூன்றாம் பரிசாக 2000/=வும் மேலும் 20 ஆறுதல் பரிசில்களும் வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வை நினைவுபடுத்தும் வகையில் சமூக அக்கறையுடன் கூடிய இரத்ததான நிகழ்வொன்று தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் உதவியுடன் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் மானிப்பாய் பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். (54)

# "வண்ணப்பொழுது" சிறுவர் நாடகங்கள்

(யாழ்ப்பாணம்)

சிறார்களின் நடன,நாடக அளிக்கைகள் சேர்ந்த நிகழ்வு நாளை மாலை 6.15 மணிக்கு திருமறைக் கலாமன்ற திறந்த வெளிஅரங்கில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யுனிசெவ் வடமாகாண வலய அலுவலக தலைமை அதிகாரி பிரகாஷ் டுலாகர் கலந்து கொள்ளவுள்ளார். 'வண்ணப்பொழுது' நிகழ்வில் நூற்று நாற்பதிற்கு மேற்பட்ட சிறார்கள கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை திருகோணமலை, யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் ஒழுங்கு செய்துள்ளது. (27)

# முரசின் இன்றைய பலன்




(09.08.2013 வெள்ளிக்கிழமை)

விஜய வருஷம் ஆடிபூரம் ஆடி மாதம் 24 ஆம் திகதி.
பூரநட்சத்திரம் பி.இ 01.30 வரை
திருதியை திதி,சித்தயோகம். இராகுகாலம 10.34- 12.04 வரை.
சுபநேரம 06.04-07.34 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | எண்ணிய எண்ணம் ஈடேறும். நல்லவர்களாக இருப்போம் என சபதமெடுத்தால் நிம்மதி, ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடல்,புகலிடம் தேடி வந்தவருக்கு ஆதரவு. |
| ரிஷபம் | பிறர் நலம் பேணுதல், ஆறுதலான வார்த்தை தேறுதல் தரும், ஒத்துழையாமையால் வேலைப்பளுவினால் அவதி, பழைய நட்பு மீண்டும் புதுப்பித்தல். |
| மிதுனம் | பிறரின் ஆற்றலைப்புகழ்வதனால் நல்ல வாய்ப்புக்கள் தேடிவரும்,பக்குவமாகக் கையாண்டதால் தண்டனையினின்றும் தப்புதல்,தேவையற்ற காரியத்தில் மூக்கை நுழைத்தல். |
| கடகம் | செலவினைக் குறைத்து சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமிக்கும் சிந்தனை,பிறர் நலத்தில் அக்கறை காட்டியதால் பாராட்டு,வட்டியும் முதலும் கிடைத்ததால் நிம்மதி. |
| சிம்மம் | சோர்வினை விரட்டி ஆர்வத்துடன் செயற்படல், பணப்பற்றாக்குறை,மனித சேவையே மாதவச்சேவை என நம்பியதால் துயர் போதல்,சாதகமான முடிவு எடுத்தல். |
| கன்னி | துணிவுடன் செயற்பட்டதால் வெற்றிக்கொடிதான் பம்பரமாகச் சுழன்று காரியமாற்றல்,அவசரபுத்தியால் விபரீதவிளைவு,ஏளனத்திற்கு ஆளாதல், வட்டிச் சுமையைக் தாங்காது தலை மறைவாதல். |
| துலாம் | சினத்தைக் கைவிட்டதால் விமோசனம், அறிமுகமில்லாதவரின் தொடர்பு அல்லலைத்தரல், விபத்தினின்றும் மயிரிழையில் தப்பிவிடல், பிரார்த்தனையினால் மனஅமைதி. |
| விருச்சிகம் | பிறரை மகிழ்வித்தல் நடக்காமல் போய்விட்டது என்ற கவலை,உற்சாகத்துடன் செயற்பட்டதால் வெற்றி இலக்கினை அடைதல்,திருட்டுப்போன பொருள் அகப்படல். |
| தனுசு | சிகரத்தை எட்டிவிடவேண்டும் என்ற ஆர்வம் பிறத்தல், இறைவன் அருளால் எடுத்த காரியம் வெற்றி,வட்டித்தொழிலுக்கு வாடிக்கையாளர் சேர்தல். |
| மகரம் | ஒருமுகச் சிந்தனையுடன் செயற்பட்டதால் சாதனை,தொட்டது துலங்க பிரார்த்தனையில் ஈடுபாடு,கற்பனையை செயற்படுத்தும் ஆர்வம்,சுவீப் அதிர்ஷ்டம். |
| கும்பம் | முடங்கிக் கிடக்காமல் செயலில் இறங்குதல், புறக்கணிக்கப்பட்டதால் கவலை, குழந்தைப்பேற்றுக்காக வைத்தியரின் ஆலோசனை நாடல்,பயணம் பற்றிய சிந்தனை. |
| மீனம் | நாளைய அறுவடைக்கு இன்று நல்லதை விதையுங்கள்,மனித நேயத்துடன் செயற்பட்டதால் வெற்றி வாகை,நொந்து போனவரை கைதூக்கிவிடும் எண்ணம்,சளிநோயால் துன்பம். |

# தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் யாழ் .மாவட்ட அலுவலகம் திறப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகம் ஒன்று நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் வைபவ ரீதியாக திறந்து வைககப்பட்டுள்ளது.

யாழ்.செயலக வளாகத்தில் பதிவாளர் அலுவலகத்திற்கு அருகாக இந்தத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலகம் திறந்து வைக்கப் பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு யாழ் .அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இந்த அலுவலகத்தை திறந்து வைத்ததுடன் இந்த நிகழ்வில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பொறியியலாளர் மாவட்ட இணைப்பாளர் உள்ளிட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரிகளும், யாழ். செயலக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

வடபகுதியின் தனியார் போக்குவரத்து சங்கங்கள் தமது சேவையின் போது எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சேவையை மேம்படுத்துதல் தொடர்பில் யாழ். செயலகத்தில் இயங்கிவரும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு கொள்ளும் முகமாகவே இந்த அலுவலகம் திறந்து வைககப்பட்டுள்ளது. (பா)

# இன்று நான்காவது டெஸ்ட்

(லண்டன்)

இங்கிலாந்து-அவுஸ்ரேலிய அணிகள் இடையே ஆஷஸ் டெஸ்ட் தொடரின் நான்காவது போட்டி இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது. ஐந்து போட்டி களைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் கொண்ட தொட ரின் முதலிரு போட்டிகளிலும் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளதுடன் மூன்றாவது போட்டி சமநிலை யில் நிறைவுற்றுள்ளன.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது போட்டி இன்றைய தினம் இங்கிலாந்தின் செஸ்டர்-லீ- ஸ்டீரிட் நகரில் ஆரம்பமாகவுள்ளது. தொட ரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கும் இங் கிலாந்து இப்போட்டியைச் சமன் செய்து தொடரைக் கைப்பற்றிக்கொள்ளும் முனைப்பில் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, இரு டெஸ்ட் போட்டிகளையும் வெற்றிபெற்றுத் தொடரை சமநிலை யில் நிறைவு செய்ய அவுஸ்ரேலிய அணி போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மகிழ்ச்சி தரும் மீள் வருகை



(ரொரண்ரோ)

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ் தொடரில் மீண்டும் களமிறங்குவது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாக நட்சத்திர வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் கூறியுள்ளார்.

ரோஜர்ஸ் கோப்பை ரென்னிஸ்போட்டி கனடாவின் ரொரண்டோ நகரில் நடை பெறுகிறது. இதில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் களமிறங்குகிறார். ஏழு முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்று சாதனை படைத்துள்ள அவர், கடந்த மே மாதம் நடந்த பிரெஞ்ச் ஓப்பன் போட்டியில் முதல் சுற்றிலேயே அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளி-யேறினார். இதைத் தொடர்ந்து நடந்த விம்பிள்டன் போட்டியில், முதுகு வலி காரணமாக விலகினார். நீண்ட ஓய் வுக்குப் பிறகு, தற்போது ரோஜர்ஸ் கோப்பைப் போட்டியில் களமிறங்கத் தயாராகியுள்ளார்.

முதல் சுற்றில் அவர் பெல்ஜியம் வீராங்கனை கர்ஸ்டன் பிலிப்கென்சுடன் மோதுகிறார். இது குறித்து நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த வீனஸ், காயம் காரணமாக நீண்ட ஓய்வுக்குப் பின்னர் மீண்டும் களமிறங்குவது மகிழ்ச்சி அளிக்கிறது. முதுகு வலியால் சேர்வீஸ் போட முடியாமல் தடுமாறி வந்தேன். இப்போது முழு உடற் தகுதி யுடன் விளையாடத் தயாராக உள்ளேன். முன்பு போல வேகமாக சேர்வீஸ் போட முடிவது திருப்தியாக உள்ளது. முன்னணி வீராங்கனைகளுக்கு நிச்சயம் சவாலாக இருப்பேன் என்றார்.

முன்னதாக, சகோதரி செரீனா வில்லியம்சுடன் இணைந்து மோனிகா செலஸ் , பவுச்சார்ட் ஜோடிக்கு எதிராக காட்சிப் போட்டியில் விளையாடி பயிற்சி பெற்றார் வீனஸ்.

இதேவேளை, மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த முதல் சுற்று ஆட்டங்களில் யானினா விக் மேயர் (பெல்ஜியம்), மோனா பார்தெல் (ஜெர்மனி) ஆகியோர் வெற்றி பெற் றனர்.

# ஆஷஸ் தொடரில் புதிய சர்ச்சை

(மான்செஸ்டர்)

ஆஷஸ் தொடரில் பங்கேற்கும் வீரர்கள், ஹொட் ஸ்பொட் தொழில்நுட்பத்தில் இருந்து தப்பிக்க, தங்களது துடுப்பின் நுனியில் சிலிகான் டேப் ஒட்டி விளையாடி யதாக புதிய சர்ச்சை வெடித்துள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில் 2-0 என முன்னிலை பெற்ற, இங்கிலாந்து அணி கோப்பையை தக்க வைத்தது. இத்தொடரில் மூன்றாவது நடுவரின் பல தீர்ப்புகள் தவறாக அமைய, பெரும் சர்ச்சை ஏற்பட்டது. இதையடுத்து நடுவர் தீர்ப்பை மறுபரிசீலனை (டி.ஆர்.எஸ்.,) செய்யப் பயன்படுத்தப்படும் ஹொட் ஸ்பொட் தொழில்நுட்பம் தொடர்பாக பலரும் கேள்வி எழுப்பினர். இந்தத் தொழில்நுட்பத்தில், தெர்மல் கமரா மூலம் பந்து, துடுப்பில் பட்டதா என்பது கண்டறியப்படும்.

இதிலிருந்து தப்பிக்க இங்கிலாந்தின் பீற்றர்சன் உள்ளிட்ட சில வீரர்கள் தங்களது துடுப்பின் நுனியில் சிலிகான் டேப் ஒட்டி விளையாடியதாக தெரி கிறது. இதன் மூலம் கமராவின் கண்களில் இருந்து எளிதாக தப்பிவிடலாம் என, அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சனல்-9 நிறுவனம் செய்தி வெளியிட்டது.

இது குறித்து அவுஸ்ரேலிய கப்டன் கிளார்க் கூறுகையில், மற்ற அணி வீரரை பற்றி என்னால் கருத்துக் கூற முடியாது. ஆனால், எங்கள் அணியில் ஒரு வீரர் கூட இம்மாதிரியான செயலில் ஈடுபட மாட்டார்கள். சிறு வயதில் துடுப்பு உடையாமல் இருக்க, எல்லோரையும் போல நானும், பைபர் கிளாஸ் டேப் ஒட்டி விளையாடியுள்ளேன் என்றார்.



பீற்றர்சன் தனது டுவிட்டர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், எனது துடுப்பில் சிலிகான் டேப் தடவி முறைகேடு செய்ததாக கூறப்படுகிறது. இந்த முட்டாள்தனமான செயலை நான் எப்படி செய்திருப்பேன். இதை படித்தபின் அதிக கோபத்தில் உள்ளேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.



## அநாகரிகத்திற்குப் பரிசு

# அபராதம்

(லண்டன்)


மது போதையில், பொது இடத்தில் அநாகரிகமாக நடந்து கொண்ட, இங்கிலாந்துக் கிரிக்கெட் அணி வீரர் மொண்டி பனிசருக்கு பொலிஸார் அபராதம் விதித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அதிகாலை 4 மணி அளவில் இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் பனிசர் பிரைடனில் உள்ள இரவு விடுதிக்கு சென்றுள்ளார். அந்த கிளப்பில் ஓரினச்சேர்க்கையாளர்கள் விருந்து நிகழ்ச்சி நடந்துள்ளது. இங்கு சென்ற பனிசர், அங்கிருந்த பெண் களைப் பார்த்து மோசமாக சைகை காட்டியுள்ளார். இதுகுறித்து அந்தப் பெண்கள் கிளப் நிர்வாகிகளிடம் புகார் தெரிவித்தனர்.

இதற்கிடையே,அங்கிருந்து வெளியே வந்த பனிசர், கிளப்பின் முன்புறம் சிறு நீர் கழித்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த கிளப்பின் பாதுகாவலர்கள் அவரைப் பிடிப்பதற்காக சென்றுள்ளனர். ஆனால், பனிசர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். பாதுகாவலர்கள் விடா-மல் அவரை துரத்திச் சென்றுள்ளனர். அருகில் இருந்த ஒரு பிசா கோர்னரில் அவர் பிடிபட்டார். அவரை அப்படியே அள்ளிக்கொண்டு கிளப்புக்கு வந்த பாதுகாவலர்கள், பொலிஸாருக்கு தகவல் கொடுத்து வரவழைத்தனர்.

பனிசருக்கு ரூ.8,432 அபராதம் விதித்தனர். பொது இடத்தில் அநாக ரிகமாக நடந்து கொண்டதால் இந்த அபாரம் விதிக்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

# சாதிக்க உதவிய டோனி



(புதுடில்லி)

சிம்பாப்வே அணிக்கு எதிராக சிறந்த கப்டனாக சாதிக்க, டோனி வழங்கிய ஆலோசனைகள் உதவியது என, இந்திய வீரர் ஹோலி தெரிவித்தார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான தொடரின் போது முதுகுப்பகுதியில் காயமடைந்த டோனி மூன்று போட்டிகளில் விளை யாடவில்லை. இதனையடுத்து அணியின் கப்டன் பொறுப்பு என்னிடம் வந்தது. அப்போது, வெவ்வேறு சூழ்நிலைகளில் எப்படி செயற்படுவது, நெருக்கடியான நேரத்தில் கூலாக எப்படி அணியை வழிநடத்துவது என டோனியிடம் ஆலோசனை கேட்டேன். டோனியின் ஆலோசனைகள், சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் அணியை சிறப்பாக வழிநடத்தி சாதிக்க உதவியது.

சிம்பாப்வே வெற்றி குறித்து டோனியிடம் பேச முயன்றேன். ஆனால், தற்போது இவர், பிஸியாக இருப்பதால் தொடர்பு கொள்ள முடியவில்லை. பொதுவாக ஓய்வு நேரத்தில் இவரை தொடர்பு கொள்வது கடினம். விரைவில் டோனியைச் சந்தித்து, சிம்பாப்வே அனுபவம் குறித்து தெரிவிப்பேன். ஐ.சி.சி., ஒருநாள் போட்டி பந்து வீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் ரவிந்திர ஜடேஜா முதலிடம் பிடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. சமீபகாலமாக சிறப்பாக விளையாடி வருவதால், இவரால் முதலிடத்துக்கு முன்னேற முடிந்தது. 19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகளில் இவருடன் இணைந்து விளையாடி உள்ளேன். உலக கோப்பை (19 வயது) தொடருக்கு கப்டனாக இருந்த போது எனது அணியில் ஜடேஜா இடம் பெற்றிருந்தார். தற்போது நாங்கள் இருவரும் சர்வதேச போட்டிகளில் இணைந்து விளையாடுவது மகிழ்ச்சியாக உள்ளது. இவரது சிறப்பான ஆட்டம் வரும் காலங்களிலும் தொடரும் என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முன்னணி வீரர்கள் முன்னேற்றம்



(மான்ட்ரீல்)

கனடா நாட்டின் மான்ட்ரீல் நகரில் ரோஜர்ஸ் கோப்பைக்கான டென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் போட்டியில் ஆன்டி முர்ரே மற்றும் ரபேல் நடால் ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் இரண்டாம் நிலை வீரரான முர்ரே, ஸ்பெயின் நாட்டின் மார்செல் கிரானோலெர்ஸ் உடன் மோதினார். இந்தப் போட்டியில் 6-4, 7-6 (2) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார். ரோஜர்ஸ் கோப்பைப் போட்டிகளில் இரு முறை சம்பியன் பட்டம் வென்ற முர்ரே கூறும்போது, இந்த வெற்றி எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. தொடர்ந்து போட்டிகளில் முன்னேறிச் செல்வேன் என்று கூறினார். ஆட்டத்திற்கு முன்பாக சிறிது நடுக்கமாக இருந்தது. எனி னும் நன்றாக விளையாடினேன் என்றும் கூறினார். முர்ரே, லத்வியா நாட்டின் எர்னெஸ்ட்ஸ் குல்பிஸ் உடன் அடுத்த சுற்றில் மோதுகிறார்.

இதேபோன்று மற்றொரு ஆட்டத்தில் கனடா நாட்டின் ஜெஸ்சி லெவைன் உடன் ஸ்பெயின் நாட்டின் ரபேல் நடால் மோதினார். இந்த ஆட்டத்தில் 6-2, 6-0 என்ற செட் கணக்கில் நடால் எளிதில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளார். நான்காம் நிலை வீரரான நடால் ரோஜர்ஸ் கோப்பைப் போட்டிகளில் இரு முறை சம்பியன் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் அணி அறிவிப்பு

சிம்பாப்வேக்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற் கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணி விபரம் அறி விக்கப்பட்டுள்ளது. டெஸ்ட், ஒரு நாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளைக் கொண்ட தொடரில் பாகிஸ்தான், சிம்பாப்வே அணிகள் மோதவுள்ளன. இப்போட்டித் தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுளளது.மிஸ்பா உல் ஹக் தலைமை யிலான டெஸ்ட், ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாம்கள், மொகமட் ஹபீஸ் தலைமையிலான ருவென்ரி-20 போட்டி குழாம் ஆகியனவே அறி விக்கப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் 23ஆம், 24ஆம் திகதிகளில் ருவென்ரி-20 போட்டிகளும், ஆகஸ்ட் 27, 29, 31ஆம் திகதிகளில் ஒருநாள் சர்வ தேசப் போட் டிகளும், செப்ரெம்பர் 3ஆம், 10ஆம் திகதிகளில் டெஸ்ட் போட்டிகளும் இடம் பெறவுள்ளன.

டெஸ்ட் குழாம்: மிஸ்பா உல் ஹக், மொகமட் ஹபீஸ், இம்ரான் பர்ஹத், அசத் ஷபீக், குர்றாம் மன்சூர், அட்னன் அக்மல், பைசல் இக்பால், யுனிஸ்கான், அசார் அலி, ஜூனைட்கான், வகாப் றியாஸ், சயீட் அஜ்மல், அப்துல் ரெக்மான், றகாத் அலி, இஸான் அடில்

ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாம்: மிஸ்பா உல் ஹக். மொஹமட் ஹபீஸ், நசீர் ஜம்ஷெத், அஹமட் ஷொட், அசட் க்ஷபீக், உமர் அமின், உமர் அக்மல், அப்ரிடி, சயீட் அஜ்மல், மொஹமட் இர்பான், ஜூனைட் கான், அப்துல் ரெக்மான், அசத் அலி, அன்வர் அலி, ஹரிஸ் சொஹைல்

ருவென்ரி-20 போட்டிக் குழாம்: மொகமட் ஹபீஸ், நசீர் ஜம்ஷெட், அஹமட் ஷெஷாத், உமர் அமின், உமர் அக்மல், சொஹைப் மசூத், அப்ரிடி, சயீட் அஜ்மல், சொஹைல் தன்வீர், மொகமட் இர்பான், ஜூனைட் கான், ஸூல்பிகர் பாபர், அசத் அலி, அன்வர் அலி, ஹரிஸ் சொஹைல்.

# துரையப்பாவில் நாளை கால்பந்து பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை வீரர்களுக்கான ஒரு நாள் கால்பந்து பயிற்சி முகாம் நாளைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெறவுள்ள இப்பயிற்சி முகாமிற்கு எயாற்றல் நிறு வனம் அனுசரணை வழங்குகின்றது.

இப்பயிற்சி முகாமின் வளவாளர்களாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளதால், அனைத்து வீரர்க ளையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கினர் கேட்டுள்ளனர். (93)

# தேசியமட்ட கடற்கரை கரப்பந்து முல்லைத்தீவில் நாளை ஆரம்பம்

(முல்லைத்தீவு)

தேசிய மட்ட கடற்கரை கரப்பந்துப் போட்டி முதன் முறையாக முல்லைத்தீவில் நடைபெறவுள்ளது.

39ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாக நடாத்தப்பட்டு வரும் பெரு விளையாட்டுப் போட்டிகளின் ஓர் அங்கமாக இடம்பெறும் கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டி முதன் முறையாக முல்லைத்தீவு கடற்கரையில் இடம்பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் ஒன்பது மாகாணங்களைச்சேர்ந்த அணிகள் பங்குகொள்ளவுள்ளன. போட்டிகள் காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாவதற்கான ஒழுங்கு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், வீர,வீராங்கனை களுக்கான தங்குமிட வசதிகள், மற்றும் உணவு போன்ற அனைத்து வசதிகளும் சிறப்பான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் ஒவ்வொரு மாவட்டங்களிலும் தேசிய மட்டப் போட்டிகளை நடாத்துவதன் மூலம் விளையாட்டுத் திறன் அதிகரிப்பதுடன் வீர,வீராங்கனைகள் விளையாட்டில் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகரிக்கும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# சுதர்சன், சேந்திரன், குணதீபன் சிறப்புப் பந்து வீச்சு கிண்ணம் வென்றது கரவெட்டி ஞானம்ஸ்



(குரும்பசிட்டி)

சுதர்சன்,சேந்திரன்,குணதீபன் ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் உதயசூரியன் வெற்றிக் கிண்ணத்தை கரவெட்டி ஞானம்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

குரும்பசிட்டி உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி கடந்த கடந்த நான்காம் திகதி உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.


இதில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குகொண்டபோதும் இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு கரவெட்டி ஞானம்ஸ் அணியும், வதிரி ஸ்ரீமுருகன் அணியும் தகுதி பெற்றன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வதிரி ஸ்ரீமுருகன் அணி சுதர்சன், சேந்திரன், குணதீபன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் வதிரி ஸ்ரீமுருகன். அணி நிர்ணயிக்கப்பட்ட பத்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சசிகரன் மட்டும் ஒன்பது ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சுதர்சன் மூன்று, சேந்திரன், குணதீபன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 36 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கரவெட்டி ஞானம்ஸ் அணி ஏழு ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சேந்திரன் 16, சுகந்தன் எட்டு, துஷ்யந்தன் ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் உமாசுதன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் கரவெட்டி ஞானம்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஞானம்ஸ் அணியைச் சேர்ந்த சேந்திரன், சிறந்த துடுப்பாட்ட வீரராக அண்ணாசிலையடி அணியைச் சேர்ந்த டிலக்ஷன், தொடர் ஆட்டநாயகனாக ஸ்ரீமுருகன் அணியைச் சேர்ந்த பவன், மைக்கல் அணியைச் சேர்ந்த ரகுபதி, சிறந்த அணியாக நாவலர் அணி என்பன தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

# சாதனை வீரர்கள் கௌரவிப்பு



(கைதடி)

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய வீர, வீராங்கனைகளான எம். மதுரிகா மற்றும் ஹரி ஆகியோர் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கராத்தேப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்டக் கராத்தேப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற எம்.மதுரிகா மற்றும் தேசிய மட்டப் போட்டிக்குத்தகுதி பெற்ற ஹரி ஆகியோர் அண்மையில் பாடசாலைச் சமூகத்தினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள இவர்கள் பாடசாலைச் சமூகத்திற்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்த்திருப்பது உண்மையிலேயே மெய்சிலிர்ப்பதாக பாராட்டி நிகழ்வில் அதிபர் சு. சிவானந்தன் தெரிவித்தார்.

இக்கௌரவிப்பு நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை மாணவ, மாணவிகள், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் அதிபர் மற்றும் கராத்தேப் பயிற்றுநர் சென்.சே விஜயராஜ் ஆகியோர் பதக்கம் வென்ற வீர,வீராங்கனைகளுடன் நிற்பதைக் காணலாம். (51)

# மஞ்சி கிண்ண கரப்பந்து மட்டுவில் ஐங்கரன் சம்பியன்

(மட்டுவில்)

தென்மராட்சி மற்றும் வடமராட்சி பிரதேச மஞ்சி கிண்ண கரப்பந் தாட்டத் தொடரில் மட்டுவில் ஐங்கரன் அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டதுடன் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

தென்மராட்சி மற்றும் வடமராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையிலான மஞ்சி கிண்ண கரப்பந்தாட்டத் தொடர் அண்மையில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பல அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐங்கரன் அணியும், மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதின.

இதில் ஆரம்பம் முதலே மட்டுவில் ஐங்கரன் அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதியில் சிறப்பான முறையில் செயற்பட்ட மட்டுவில் ஐங்கரன் அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியதுடன் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் யாழ். கரப்பந்தாட்ட சங்கத்தைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகள், விளையாட்டு ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (93,118)



(படம் : 118)

# தமிழர் பிரச்சினையின் துரோகிகள்

– என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து.




விக்னேஸ்வரன் தனது ஸ்ரீலங்கா அடையாளத்தை பெருமளவில் நிருபிப்பதற்காக, நன்கு வரையறுக்கப்பட்டுள்ள தமிழ் அடையாளத்துக்கு அப்பாலும் சென்றுள்ளார், ஆனால் அவர் அதிக தூரம் செல்லவேண்டியதாக இருக்க வில்லை. எங்களது சிங்கள தேசியவாதிகளான நண்பர்கள் அவரது உண்மையான நிறத்தை அறியவேண்டுமாயின் அவர்களது எதிர்ப்பாளர்களான தமிழ் தேசியவாதிகளைப் பற்றி அறிந்து கொண்டால் மட்டும் போதும். எல்.ரீ.ரீ.ஈ யானது அவர்களைச் சுற்றி இருக்கிறதோ அல்லது போன்றவர்கள் ரி.என்.ஏ யினை இன்னும் அதிகமாக இலக்கு வைத்துள்ளார்கள். ஒரு வகையிலோ அல்லது வேறு வழியிலோ இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையோ அல்லது வேறு இந்திய அரசாங்க அதிகாரிகளையோ, துரோகிகள் என முத்திரையிட்டுள்ள அவர்கள் ரி.என்.ஏ தலைமை இவர்களை சந்தித்துப் பேசுவதை ஏற்றுக்கொள்கிறார்களில்லை. சுயபாணி சிங்கள தேசிய வாதிகள் இந்தக் கருத்தை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும், ஆனால் அவர்களுக்கு அவர்களது சொந்த அரசியல் நிர்ப்பந்தங்கள் உள்ளன. ரி.என்.ஏ இற்கு அதன் வேலை வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளது,

இல்லையோ, தமிழ் தேசியத் தின் சுய பாணியிலான கதாநாயகர்கள் மற்றும் பாதுகாவலர்கள் அவர்களது கண்ணோட்டத்தில் பிரிவினைவாதிகளாக இல்லாதவர்களை தமிழர் விடயத்தின் துரோகிகள் என்றே முத்திரை குத்தியுள்ளார்கள்.

பாக்கு நீரிணைக்கு அப்பால் தமிழ் நாட்டில் உள்ள ம.தி.மு.க. வின் வைகோ குறிப்பாக வட மாகாண சபைக்கான தேர்தல் பிரசார வேலை. மறுவாழ்வு மற்றும் நல்லிணக்கம் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு தேர்தலுக்குப் பிந்திய ஒரு அர்த்தமுள்ளதும் வெற்றிகரமானதுமான நிருவாகத்தை நடத்துவதற்கு தங்கள் குறிக்கோள்களை அவர்கள் முன்னதாகவே வரையறுக்க வேண்டும். வடக்கிலுள்ள தமிழ வாக்காளர்களிடமும் மற்றும் நாட்டுக்கு உள்ளே மற்றும் வெளியே வேறு இடங்களி லுள்ள பெருந்தொகையான தமிழ் மக்களிடமும் அவர்கள் எதற்காக தங்களுக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை சொல்லவேண்டிய தேவை உள்ளது - மற்றும் அவர்கள் எதை எதிர்பார்க் கிறார்கள் என்பதை அல்ல.

## நட்சத்திரங்களின் மோதலால் தங்கம்!



ஒரு காலத்தில் மிகுந்த அடர்த்தி வாய்ந்த நட்சத்திரங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு அழிந்ததால்தான் இன்று நம் பூமியில் கிடைக்கும் தங்கம் உருவானது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். மேலும், காமா கதிர்வீச்சு வெடிப்பு போன்ற ஒன்று தான் தங்கம் உருவாக காரணம் என்று கூறுகின்றனர். 2 பெரிய நியூட்ரான் நட்சத்திரங்களின் மோதல் தான் தங்கம் உருவாக காரணம் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும். இந்த நியூட்ரான் நட்சத்திரங்களின் மோதலால் ஏற்பட்ட தங்கத்தின் எடை 10 நிலவுகளின் எடைக்கு சமமானது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## ‘ரஹ்மானிஷ்க்’



“ரஹ்மானிஷ்க்” என்னும் பெயரில் ஏ.ஆர்.ரஹ்மானின் மாபெரும் இசை நிகழ்ச்சி இந்தியாவின் 5 நகரங்களில் அக்ரோபர் மாதத்தில் நடைபெற இருக்கிறது. ரஹ்மானின் இசையில் அவுஸ்ரேலியாவின் புகழ்பெற்ற பாடகி கிரிடாவையும் பாடவைக்க இருக்கின்றனர். “அவர் என்ன அவ்வளவு பெரிய பாடகியா?” என்று கேட்காதீர்கள். அவரின் இரத்தத்தில் கிரிக் கெட்டோடு சேர்ந்து இசையும் கலந்திருக்கின்றது... அதுதான் விசேஷம்! அவரின் முழுப் பெயர் கிரிடா பிராட்மன்! கிரிக்கெட் வரலாற்றுப் புத்தகத்தில் இடம்பெற்ற சாதனை மன்னன் டொன் பிராட்மனின் பேத்திதான் கிரிடா!!

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

23

ப்ரீ ஸ்கூலில் கற்றுக் கொண்ட நல்ல விஷயங்கள், திறன்கள், குழந்தைகள் வளர்ந்த பின்பும் (பத்துப் பதினைந்து வருடங்களாகியும்) மறைவதில்லை என்று சில ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. “இல்லை இல்லை. ப்ரீ ஸ்கூலின் பாதிப்பு (effect) குறைந்த காலத்திற்கு மட்டுமே” என்று வாதிடுவோரும் உண்டு.

ப்ரீ ஸ்கூலில் சேர்ப்பது எந்த விதத்திலும் வீட்டில் சொல்லிக் கொடுப்பதைக் குறைத்து விடக் கூடாது. வீட்டுக்கு வந்த பின்பும், பெற்றோர்கள் குழந்தையுடன் அதிக நேரம் செலவிட்டு, உரையாடிக் கொண்டிருக்க வேண்டும். அதுதான் சரியான முறை.

பெற்றோர்களும், இந்த சமூகமும் குழந்தைகளை ப்ரீ ஸ்கூலில் விடுவதன் மூலம் அவர்களிடம் ஒரு பெரிய பொறுப்பை ஒப்படைத்திருக்கின்றனர் என்பதை ஒவ்வொரு ப்ரீ ஸ்கூலும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும்.

நல்ல தரமான ப்ரீ ஸ்கூலில் சேர்ப்பதானால் சரி. ப்ரீ ஸ்கூலின் தரம் சரியில்லை என்று நீங்கள் நினைத்தால் வீட்டிலேயே கற்றுக் கொடுப்பது உத்தமம்.

உங்கள் குழந்தையின் ஐ.க்யூ. என்ன?

மேற்கூறிய ஒற்றைக் கேள்விக்கான விடையை அறிய, நான்கு ஒப்சன்களைக் கொண்ட கேள்விகள் இருபதைக் கேட்டு, அதில் எத்தனை கேள்விகளுக்கு சரியான பதில் அளிக்கிறதோ, அதைக் கொண்டு உங்கள் குழந்தையின் ஐ.க்யூ வைக் கணக்கிடுவது எல்லாம் பழைய பஞ்சாங்கமாகி விட்டது.

இன்டலிஜென்ஸ் எனப்படும் அறிவுத் திறத்தைப் பற்றி இரண்டு தவறான அனுமானங்கள் நிலவின.


1. பிறப்பு முதல் இறப்பு வரை நம் அறிவுத் திறனானது ஃபிக்ஸ் செய்யப்பட்ட ஒன்று. அது மாறவே மாறாது.

2. ஒரே ஒரு இண்டலிஜென்ஸ் தான் நமக்கு உள்ளது.

மேற்கூறிய இரண்டு அனுமானங்களுமே தவறென்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப் பட்டுள்ளன.

நம் புத்திக் கூர்மையை கற்றலின் மூலமும், பயிற்சியின் மூலமும் நாம் எவ்வளவுக்கு எவ்வளவு பட்டை தீட்டுகிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு அது வளர்ந்து கொண்டே இருக்கிறது,

Nature and Nurture எனப்படும் இரண்டு விஷயங்கள் தான், அதாவது பாரம்பரியமாக நமக்குக் கடத்தப்படும் நமது ஜீன்களும் (Nature),





நாம் வளர்கிற சுற்றுப் புற சூழலும் (Nurture) தான் நம் அறிவுத் திறனை நிர்ணயிப்பதற்கான காரணிகள்.

Gardner என்னும் அறிவியல் அறிஞர், Theory of multiple intelligences என்னும் கோட்பாட்டை முதல் முறையாக முன்வைத்தார்.

Linguistic ("word smart")
Logical-mathematical ("number/reasoning smart")
Spatial ("picture smart")
Bodily-Kinesthetic ("body smart")
Musical ("music smart")
Interpersonal ("people smart")
Intrapersonal ("self smart")
Naturalist ("nature smart")

மனித இனமானது பல்லாயிரக் கணக்கான வருடங்களாக மேற்கூறிய இந்த எட்டு வகை அறிவுத் திறன்களின் மூலமே சிந்தித்து வருகிறது என்றும் இவ்வகை இண்டலிஜென்ஸ்களை சிந்தனை உறுப்புகள் (mental organs) என்றும் கார்ட்னர் உருவகித்துள்ளார்.

நம் கல்வி முறையும், குழந்தை வளர்ப்பு முறையும் Linguistic மற்றும் Logical-mathematical intelligence க்கு மட்டுமே அதிகபட்ச முன்னுரிமை கொடுத்து மற்ற அறிவுத் திறன்களுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

Multiple intelligence என்னும் கருது கோளைப் புரிந்து கொண்டால், நாம் நம் குழந்தைகளைப் பார்க்கும் விதமும், அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் விதமும் நிச்சயமாக மாறுபடும்.

எல்லாக் குழந்தைகளும் ஒரு சில இன்ட லிஜென்ஸில் அடி தூள் கிளப்பும். ஒரு சிலவற்றில் மீடியமாக, இன்னும் சிலவற்றுள் மிகக் குறைவான திறனுடன் விளங்கும் இவற்றுள் எந்தெந்தத் திறன்களெல்லாம் பட்டை தீட்டப்பட சூழலும், வாய்ப்பும் கிடைக்கிறதோ, அவைகளெல்லாம் வளர்ந் தோங்கும். முறையான பயிற்சியினால் இந்த மல்டிபிள் இண்டலிஜென்ஸ் எல்லாவற் றையுமே நம் குழந்தைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்க முடியும். தொடர்ந்த கவனிப்பின் மூலம் எந்த இண்டலிஜென்ஸை நம் குழந்தை விரும்பி செய்கிறானோ(ளோ), அதையே அவர்களது துறையாக தெரிவு செய்வதற்கு நாம் உதவி செய்யலாம்.

இயல்பாக தனக்குப் பிடித்த ஒரு விஷயத்தையே தன் பணியாகத் தேர்ந்தெடுத்தால், அதில் நம் குழந்தைகள் சாதனைகளைச் செய்வர்.

மல்டிபிள் இண்டலிஜென்ஸ் கொன்செப்ட் மூலம் கற்றுக் கொடுப்பது, குழந்தையின் விருப்பத் தேர்வை முறையாக அறிந்து கற்பித்தலை சாத்திய மாக்குவதால் கற்றல் ஒரு இனிய நிகழ்வாக அமைகிறது.

(தொடரும்)

# எம்.கே.டி. எனும் பண்ணிசைப் பாவலன்

05

- வே. முத்துக்குமார் -

எம்.கே.டி.யினுடைய சொந்த வாழ்க்கையைப் பொறுத்தவரையில் அவருக்கு மூன்று சகோதரிகள், இரண்டு சகோதரர்கள். எம்.கே.டி.யைப் போலவே அவரது சகோதரர்களில் ஒருவரான எம்.கே.சண்முகமும் கர்நாடக இசைக் கச்சேரிகள் செய்து வந்தார். திரையுலகிற்கு அறிமுகமாவதற்கு முன்னதாகவே அவருக்குத் திருமணம் ஆகிவிட்டிருந்தது. அவருடைய திருமண வரவேற்பு நிகழ்ச்சியில், எம்.கே.டி.யுடன் நாடகத்தில் இணைந்து நடித்த எஸ்.டி.சுப்புலட்சுமியின் "ஹரி-கதா காலட்ஷேபம்" ஜி.ராமநாதனின் இரட்டை ஹார்மோனிய இசைப் பின்னணியுடன் நடைபெற்றது. பவளக்கொடி வெளியான தருணத்தில் எம்.கே.டி.யினுடைய முதல் மகள் சுசீலா பிறந்தாள். இரண்டு வருட இடைவெளிக்குப் பிறகு இரண்டாவது மகள் சரோஜா பிறந்தாள். 1939ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அவருடைய மகன் ரவீந்திரன் பிறந்தான்.

நாடகத் துறையிலும், சினிமாத் துறையிலும், கர்நாடக இசைக் கச்சேரிகள் மூலமாகவும் மக்களின் மனதை ஆக்ரமித்திருந்த எம்.கே.டி.யினுடைய புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் வந்து சேர்ந்தவர் லட்சுமிகாந்தன். இளைஞனாக இருந்த ஆரம்ப காலத்தில் வழக்கறிஞராவதற்கு முயற்சி செய்தார் லட்சுமிகாந்தன். ஆனால் அவரால் முடியவில்லை. அதற்கு மாறாக, வழக்கறிஞர்களுக்கு வழக்குப் பிடித்து தரும் வேலையைச் செய்து வந்தார். ஒரு வழக்கொன்றில் போலியான ஆவணங்களைத் தயார் செய்து தந்ததோடு பொய்க் கையெழுத்திட்டார் என அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டு, ஏழு ஆண்டுகள் ராஜமுந்திரி சிறையில் அடைக்கப்பட்டார். ஒருமுறை அச் சிறையிலிருந்து அவர் தப்பிக்க முற்பட, மீண்டும் கைது செய்யப்பட்டு அந்தமான்சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். இரண்டாம் உலகப் போரின்போது அந்தமான் தீவுகள் ஜப்பானியர்கள் வசம் வர, லட்சுமிகாந்தன் விடுதலை செய்யப்பட்டார். தனது விடுதலைக்குப் பிறகு இந்தியாவிற்குத் திரும்பிய அவர் தன்னை ஒரு பத்திரிகையாளராக அடையாளப்படுத்திக் கொண்டு 1943ஆம் ஆண்டு "சினிமா தூது" என்கிற மஞ்சள் பத்திரிகையைத் தொடங்கி நடத்தி வர ஆரம்பித்தார். சமூகத்தில் மிகப் பெரிய அந்தஸ்துடன் இருக்கக்கூடிய தொழிலதிபர்கள், சினிமாக்காரர்கள், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், ஜமீன்தார்கள், அரசியல்வாதிகள் எனக் பலதரப்பட்டவர்களைப் பற்றி தனது மஞ்சள் பத்திரிகையில் தொடர்ந்து அவதூறான செய்திகளை அவர் எழுதி வந்தார். கிசுகிசுக்கள் மற்றும் செவிவழிச் செய்திகள் மூலமாகவும் மூன்றாம் தரமான மொழிகளுடன் இதை அவர் செய்து வந்தார்.

திரைப்படத்துறை சார்ந்தவர்களைப் பற்றி அவதூறான கதைகளைப் பிரசுரித்து வருகின்ற சினிமா தூது பத்திரிகையின் உரிமத்தை இரத்து செய்ய வேண்டுமென அப்போதைய



மெட்ராஸ் கவர்னர் ஆர்ணல்ட் ஜேம்ஸ் ஹோபிடம் புகார் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர் எம்.கே.டி, என்.எஸ்.கே. மற்றும் திரைப்பட இயக்குநர் ஸ்ரீராமுலு நாயுடு. மூவரது மனுவை ஏற்றுக்கொண்ட கவர்னர் சினிமா தூது பத்திரிகைக்கான உரிமத்தை ரத்து செய்தார். பிறகு சில மாத இடைவெளியில் மீண்டும் ஹிந்து நேசன் என்கிற புதிய பெயரில் மஞ்சள் பத்திரிகையொன்றைத் தொடங்கினார் லட்சுமிகாந்தன். பத்திரிகையின் பெயர் தான் புதிதாக இருந்ததே தவிர, மற்றபடி தன்னுடைய முதல் பத்திரிகையான சினிமா தூதில் செய்த வந்த அதே பணியைத்தான் தொடர்ந்து இதிலும் செய்துவந்தார் லட்சுமிகாந்தன். உயர் அந்தஸ்தில் இருந்த பலர் தங்களைப் பற்றி லட்சுமிகாந்தன் தவறாக எழுதி விடக்கூடாது என அஞ்சி அவருக்குப் பணம் கொடுத்து வந்தனர். இப்படியாக கணிசமான வரும்படி வர அத்தொழிலை அவர் தொடர்ந்து செய்துவர, அது அவர் ஏற்றுக்கொண்டிருந்த வாழ்க்கைப் பாதையின் எல்லா திசைகளிலிருந்தும் நிறைய எதிரிகளை உருவாக்கித் தந்தது.

1944ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் தேதியன்று சென்னை வேப்பேரியிலுள்ள தனது நண்பரான நற்குணம் என்பவரைச் சந்தித்து விட்டு சைக்கிள் ரிக்ஷாவில் திரும்பிக் கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத சில மர்ம நபர்களால் கத்திக் குத்துக்கு உள்ளானார் லட்சுமிகாந்தன். காயம் அதிகமில்லாத காரணத்தால் வெளிப்புற நோயாளியாகப் பொது மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். மருத்துவமனையில் வைத்து எதுவுமே நடக்காதது போல எப்போதும் போல் மிகவும் நகைச்சுவையாக இருந்தவாறு பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்தார். தன்னை அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாகவும், குறிப்பிட்ட யார் மீதும் தனக்கு சந்தேகம் இல்லையென்றும் தனது வாக்குமூலத்தில் அவர் தெரிவித்தார். ஆனால் "போட் மெயில்" (அந்தக் காலத்தில் சென்னை - தனுஷ்கோடி இடையே ஓடிக்கொண்டிருந்த ரயிலின் பெயர்) கொலை வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த கொலையாளிகளைத் தனது பத்திரிகையின் மூலம் லட்சுமிகாந்தன் வெளிக்கொணர முயன்றதாலேயே அவர் கத்திக்குத்துக்கு ஆளானதாக வதந்திகள் உலா வர ஆரம்பித்தன. சிறிய அளவில் வங்கி ஒன்றை நடத்தி வந்த தேவகோட்டையைச் சேர்ந்த பணக்காரர் ஒருவர் போட் மெயிலில் வைத்துக் கொலை செய்யப்படிருந்தார். ஆனால் அக்கொலை குறித்த உண்மைகள் நீதிமன்ற விசாரணைக்கு வரும் முன்பாகவே சம்பந்தப்பட்ட பெரும்புள்ளிகளின் காப்பெட்டிற்கு அடியில் புதைக்கப்பட்டுவிட்டன.

(தொடரும்)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் யேசுகிறிஸ்து பேசியதாகக் கருதப்படும் அராமிய மொழியை இன்றும் பேசி வருகின்றனர். அவர் பேசியது இந்த மொழியில்தானா என்பதில் விவாதம் இருந்தாலும் பெரும்பாலான மொழி வல்லுநர்கள் இதுவாக இருக்கக்கூடும் என ஒப்புக்கொள்கின்றனர்.

இம்மொழி 3,000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று கூறப்படுகிறது. மேற்கு ஆசிய நாடுகள் பகுதியில் இது பரவலாகப் பேசப்பட்டது. வணிகம், ஆட்சி, வழிபாடு இவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டது. இன்றைய இஸ்ரேல் பகுதியில் 2,500 ஆண்டுகளுக்கு முன் வழக்கிலிருந்த முக்கிய மொழி இது.



# காப்பாற்றப்படும் அராமிய மொழி

இந்த மொழியைப் பாதுகாக்க கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த மொழியியலாளரான பேராசிரியர் ஜெ.ஃப்ரிகான் முயற்சித்து வருகிறார். அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வரும் மொழிகள், கலாசாரங்களுக்காக கேம்பிரிட்ஜில் ஒரு துறை உள்ளது. அதைச் சேர்ந்தவர் இவர். கடந்த 15 ஆண்டுகளாக அராமிய மொழியின் பல்வேறு கிளை மொழிகளையும் வட்டார வழக்குமொழிகளையும் ஆராய்ந்து வருகிறார். வடக்கு, வடமேற்கு இராக், தென்கிழக்கு துருக்கி பகுதிகளில் வழக்கிலிருக்கும் அராமியம் முற்றிலும் மறைந்துவிடாமல் இருக்கக் கடும் முயற்சி எடுத்துவருகிறார்.

அனைத்து கிளை மொழிகளையும் பதிவு செய்து முறையாகத் தொகுத்து ஆராய்வதன் மூலம் இம்மொழி பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய முடியும் என நம்புகிறார்.

இன்றைய சிரியா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளில் சிலர் தங்களது தாய்மொழியாக அராமிய மொழியைப் பேசிவருகின்றனர். அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் குடியேறியுள்ள இப்பகுதியைச் சேர்ந்த சிலரும் இதைப் பேசுகின்றனர். எல்லாமாகச் சேர்ந்து, கிட்டத்தட்ட 5 இலட்சம் பேர் இன்று இதனைப் பேசுகின்றனர் என்று கூறப்படுகிறது.

கிழக்கத்திய தேவாலயங்கள் சிலவற்றில் அராமிய கிளை மொழி பயன்படுத்தப்படுகிறது. நவீன வகை அராமியம் இன்றைய கிறிஸ்தவ, யூதர்கள் சிலரால் பேசப்பட்டுவருகிறது. இதிலும் பல கிளை மொழிகள் உள்ளன.

ஆரம்பக் கல்வி அளவில் இந்த மொழியை எழுத, படிக்க கற்றுத் தரும் முயற்சி பெற்றோர்களாலும் மொழி ஆர்வலர்களாலும் தொடங்கப்பட்டிருக்கிறது.

- கறையான் புற்றுகள் உள்ள இடத்தில் பூமிக்கடியில் உலோகத் தாதுக்கள் இருக்கும் என்று 6ஆம் நூற்றாண்டில் வராக மிகிரர் எழுதிய "பிருஹத் சம்ஹிதை" எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.
- பிடரியுடன் உள்ள ஆண் சிங்கத்தை வீரமுள்ளது என நாம் நினைத்துக் கொண்டிருந்தாலும், 90 சதவீதம் விலங்குகளை வேட்டையாடிக் கொல்வது பெண் சிங்கம்தான்.
- NEWSPAPER என்பதன் விரிவாக்கம் NORTH, EAST, WEST, SOUTH, PAST AND PRESENT, EVENTS, REPORT என்பதாகும்.
- FOUR என்னும் ஆங்கில எண்ணுக்கு உள்ள சிறப்பு அதில் நான்கு எழுத்துகள் இருப்பதுதான். வேறு எந்த ஓர் ஆங்கில எண்ணுக்கும் அதன் எண்ணிக்கைக்குச் சமமான எழுத்துகள் இல்லை.
- செவ்வாய் கிரகத்திலிருந்து வானத்தைப் பார்த்தால் நீல நிறத்தில் தெரியாது செம்மஞ்சள் நிறத்தில்தான் தெரியும்.
- ஒருகாலத்தில் மாதுளம் பழத்தில் ஓட்டை போட்டு, லவங்கத்தை வைத்து பாத்ரூமில் நறுமணத்திற்காக வைத்திருந்தனர். இதுதான் முதல் Toilet Freshener.
- முகம் பார்க்கும் கண்ணாடிக்கு ரசம் பூசும் முறையை ஜேர்மனிய வேதியல் அறிஞர் லீபிக் கண்டறிந்தார்.
- ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு கடல் எல்லையை நிர்ணயித்துள்ளார்கள். ஒரு நாட்டின் கடல் எல்லை என்பது அந்த நாட்டின் கடலில் இருந்து மூன்று கடல் மைல்கள் ஆகும். அதாவது 6080 அடி வரை அந்த நாட்டின் கடல் எல்லையாகும்.
- 14 நாடுகளை எல்லைகளாகக் கொண்டது சீனா.
- வட வியட்நாம், தென் வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகிய நான்கு நாடுகள் சேர்ந்த ஒரு நிலப்பரப்பைத்தான் "இந்தோசீனா" என்று குறிப்பிடுகிறார்கள்.

# தெரியுமா?









# யாழ். கைதடி மேற்கு கிராமத்தின் வளர்ச்சிப்படிகள்....

**இலங்கைத்** திரு நாட்டின் யாழ். பாடி மண்ணின் தென்மராட்சியின் மேற்குபுற கிராமம் கைதடி ஆகும். கைதடி சந்தியில் இருந்து தெற்கான 1.5 கிலோமீற்றர் தூரமுடையதும் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள உதயநகர், தெருநகர், கோவையூர், நேவையூர் ஆகிய நான்கு



சிற்றூர்களையும், கடற்கரையை எல்லையாகவும் அத்தோடு அண்ணமார், வைரவர், நாகபூஷணி அம்மன், ஞானவைரவர், கண்ணகி அம்மன் ஆகிய காவல்தெய்வங்களை தனது தெய்வங்களாகவும் கொண்ட 2 கிலோமீற்றர் நீளமும், 800 மீற்றர் அகலமும் உடைய ஓர் நீள் வட்ட கிராமம் ஆகும். இக் கிராமமானது சரஸ்வதி சன சமூக நிலையம் என்ற பாரிய கலையரங்கையும் உதயநகர் பொது மண்டபத்தையும், நேவையூர் கட்டடத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளதோடு J/293 இல் அமையப்பெற்ற கிராமமாகும்.

### கைதடி மேற்கு கிராம வரலாறு

1950ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அதாவது இலங்கை சுதந்திரம் அடைந்து இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் வரைக்கும் கல்வியறிவு குறைந்தவர்களாகவும் வறியவர்களாகவும் காணப்பட்டதோடு சிலரே படித்தவர்களாகவும் அரச உத்தியோகம் பார்த்தவர்களாகவும் இருந்தார்கள் C.M.S.



ஆங்கில பாடசாலைகளில் C.C.No.1 பாடசாலை (தற்போது கலைவாணி வித்தியாலயம்) எமது எல்லைக்குள் காணப்படுவதால் அன்று தொட்டு இன்றுவரைக்கும் தனது கல்வியை போதித்து வருகின்றமையால் படிப்படியாக கல்வியறிவு உயர்வடைந்து தற்போது பலர் கல்வியாளர்களாக காணப்படுகின்றனர்.

1950 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் எமது கிராமம் இரண்டு பிரதான வசிப்பிட ஊர்களாக காணப்பட்டன (தெருநகர், கோவையூர்) இவ் ஊர் இளைஞர்கள் தோட்ட வெளிகளில் அக்காலத்து விளையாட்டுக்களான (கிட்டிப்புள், கிளித்தட்டு மறித்தல், வாரோட்டம், சடுகுடு, பட்டம் ஏற்றல் போன்றவற்றையும் தெருநகர் இளைஞர்கள் கலட்டித் தோட்ட வெளியிலும், கோவையூர் இளைஞர்கள் செம்பாட்டு கிணற்றடி தோட்ட வெளியினுள் மேற்படி விளையாட்டுக்களை விளையாடுவர் அத்தோடு இரு ஊர்களுக்கும் போட்டிகள் நடைபெறும் அதனால் சண்டைகளும் பின்பு சமாதானமும் காலத்துக்குக் காலம் நடைபெறும். எனினும் எல்லோரும் உறவினரே.

அப்போதைய தேசிய விளையாட்டான மாட்டு வண்டிச் சவாரி எல்லாக் கிராமத்தவர்களும் சேர்ந்து ஞாயிற்றுக் கிழமைகளில் செட்டி தேவடியில் இருந்து கைதடி தெற்கு ஏற்றம் வரைக்கும் இவ்விரண்டு வண்டிகளுக்கான போட்டிகள் நடைபெறும் அப்போதைய காலகட்டத்தில் மானிப்பாய் வீதியானது தார் போடாத கிரவல் வீதியாக காணப்பட்டதனால் பின்பு இப்போட்டிகள் உதயநகர் தரவைக்கு மாற்றப்பட்டது.




அப்போதைய காலத்தில் எப்போதும் தோட்டச் செய்கை காரர்களாகவும் சிலர் வயல் செய்கைகளில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் பகுதி நேரவேலையாக கூலிவேலை போன்ற வேலைகளில் ஈடுபாடு கொண்டவர்களாகவுல் சில பெண்கள் இங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு புகையிரதம் மூலம் புல் வியாபாரத்திலும் ஈடுபட்டார்கள். சில காலங்களில் மீன்பிடித்தொழிலும், உயர்வேலைகளிலும் சிலர் ஈடுபடுபவர்களாக காணப்பட்டனர். ஆனால் காலத்திற்கேற்ப தொழில்கள் மாற்றமடைந்த வண்ணம் காணப்படுகின்றது.

கைதடியில் ஒரு சிலஇடங்களில் கூட்டுறவுச் சங்கங்களும், அதன் அருகில்சனசமூக நிலையத்தையும் கொண்டிருந்தமையினால் தெருநகர், கோவையூர் மக்கள் தமக்கு கிட்ட சுதந்திரமான சன சமூக நிலையம் வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டார்கள். தோட்ட வெளிகளில் விளையாடியவர்களுக்கு பத்திரிகை வாசிப்பதற்கு இடமொன்றும் தேவைப்பட்டது.

பத்திரிகை வாசிக்கும் பழக்கமான V.C.அம்மான் 1953 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சைக்கிள் வாடகைக் கடை ஒன்றை உரு வாக்கினார். அத்தோடு தான் காலையில் கைதடி சந்திக்குச் சென்று தான் வாசிக்கும் பத்திரிகையுடன் வருவார். இவருடைய சைக்கிளை வாடகைக்கு எடுக்க வருபவர்கள் படிப்படியாக பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தை உடையவர்களாகவும் நாட்டு நடப்புக்களை பற்றி விவாதிப்பவர்களாகவும் மாற்றமடைந்தனர்.

இக்காலப்பகுதி புரட்சிகரமான முன்னேற்றமான காலப்பகுதி என உணரலாம். 1952ஆம் ஆண்டில் இருந்து 1956ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் பல புரட்சிகரமான முன்னேற்றமான சம்பவங்கள் மேற்கு பகுதியினரால் கைதடியில் நடைமுறைப்படுத்தப்பட்டது.





1955ஆம் ஆண்டு காலப்பகுதி எட்டு வார தோட்ட பின்பகுதியில் அப்போதைய சிறுவர்கள் மென்பந்து விளையாட தொடங்கினார்கள். பின்பு 59,60ஆம் ஆண்டு காலப்பகுதியில் தாம் கரப்பந்தாட்டத்தையும் கால்பந்தாட்டத்தையும் உருவாக்கினோம்.

அதன்பின்பு கலையரங்கை அமைப்பதற்கு அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் நவரத்தினம் பன்முகப்படுத்தப்பட்டவரவு செலவுத் திட்டத்தில் 10000 ரூபா ஒதுக்கித் தந்தார் மீதிப் பணத்தினை எமது அங்கத்தவர்கள் மூலம் சேகரித்து சிரமதான அடிப்படையினர் கலையரங்கு 1992ஆம் ஆண்டு கட்டிமுடிதது திறப்புவிழா செய்யப்பட்டதுடன் இக் கலையரங்கு இன்னும் கம்பீரமாக மிளிர்கின்றது.

அத்தோடு எமது இளைஞர்களின் துடுப்பாட்டமானது படிப்படியாக வளர்ச்சியடைந்து 2002, 2003, 2004 ஆண்டுகள் தொடர்ச்சியாக தென்மராட்சி பிரதேச செயலகம் நடாத்திய போட்டிகளில் சம்பியன் ஆகியமையும் பல்வேறு கழகங்கள் நடாத்திய போட்டிகளில் வெற்றியை பெற்ற வண்ணமும் கணப்படுகின்றது.

அத்தோடு எமது கல்வியிலே 1992ஆம் ஆண்டு சுகந்தி என்ற மாணவி பல்கலைக்கழகம் தெரிவாகியமையும் அதன் தொடர்ச்சியாக பலர் பல்கலைக் கழகம்,வெளிகளப்பட்டப்படிப்புக்கள் போன்றவற்றினும் இதுவரை காலமும் 15 மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர். 2009ஆம் ஆண்டில் க.பொ.த.உயர் தரப்பரீட்சையில் இரண்டு மாணவர்கள் வணிகத்துறையில் 3 ஏ சித்தியெய்தியமையும் அத்தோடு 2012ஆம் ஆண்டு உயர்தரத்தில் ஒருமாணவன் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான தோடு 9 மாணவர்கள் க.பொ.த.சாதாரணத்தில் சித்தியடைந்து (வங்கி முகாமையாளர் பாடசாலை அதிபர்கள், நீதவான்கள்) என கல்வியில் வளர்ச்சியடைந்து செல்கின்றார்கள்.

அத்தோடு சன சமூக நிலையம் தனது 50ஆவது ஆண்டில் கால்பதித்து எமது மக்களுக்கு பல் வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளையும் கிராம வளர்ச்சியையும் இயன்றவரை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

**தொகுப்பு அ. அனித்தா**



# குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு வங்கிக்கடனை வழங்கும் செயற்றிட்டம்

(மன்னார்)

வாழ்வெழுச்சி (திவிநெகும) குடிசைக்கைத் தொழில் முயற்சியாளர்களிற்கான வங்கிக்கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் வங்கிக் கிளினிக்) எதிர்வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் 16 இற்கும் மேற்பட்ட வங்கிகளும் நிதி நிறுவனங்களும் பங்கு பற்றுவதுடன் 200இற்கும் மேற்பட்ட பயிற்சிகளை பூர்த்தி செய்த குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சிறுதொழில் முயற்சிகளிற்காக கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஆர்வமுடையவர்கள் பங்குபற்றுவதுடன் அவர்கள் வங்கிகளுடன் இணைக்கப்படுவார்கள் எனவும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

மகிந்த சிந்தனை எதிர்கால தொலை நோக்கிற்கு அமைவாக சிறுதொழில் முயற்சியாளர்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கான ஒரு உபாயமாக வங்கிக்கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் செயற்பாடு வாழ்வெழுச்சி செயற்றிட்டத்தில் ஒரு முக்கிய விடயமாக அமுலாக்கப்படுகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் இடம் பெறும இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்து கொள்வதுடன் நகர அபிவிருத்தி அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்க மற்றும் பல முக்கிய பிரமுகர்களினதும் பங்கு பற்றலுடன் இடம் பெறவுள்ளது.

இதில் குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்களை வங்கிகளுடன் இணைத்து மதிப்பீட்டு படிவங்களும் சிபார்சு செய்யப்பட்ட கருத்திட்டங்களும் முன்வைக்கப்பட்டு வங்கிகளுடன் கலந்துரையாடப்பட்டு குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்களிற்கான கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்.

இதுவரை நாடளாவியரீதியில் 11 மாவட்டங்களில் (வங்கிக் கிளினிக்) நிகழ்ச்சித்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு குடிசைக் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான வங்கிக்கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் இத்தகைய (வங்கிக் கிளினிக்) நிகழ்ச்சித் திட்டங்கள் எதிர்வரும் காலங்களில் ஏனைய மாவட்டங்களிலும் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# கரையொதுங்கிய 7 சடலங்களில் இரண்டே அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அண்மைக்காலமாக தீவுப்பகுதிகடற்கரையோரம் கரையொதுங்கிய ஏழுசடலங்களில் இன்னமும் ஐந்து சடலங்கள்அடையாளம்காண்பதற்காக யாழ். போதனாவைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டிருப்பதாக அவ்வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துளளார். சிறுமி ஒருவர் உட்பட இரண்டு பெண்களினுடையதும் ஐந்து ஆண்களினுடையதுமான இந்தச் சடலங்களில் இரண்டு ஆண்களின் சடலங்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டுள்ளன.

அண்மையில் மன்னார்ப்பகுதியில் கடற்றொழில் நடவடிக்கையின்போது காணாமற்போன இரு மீனவர்களது சடலங்களே இவை என உறவினர்களினால் அடையாளம் காட்டப்பட்டுள்ள நிலையில் அவை உறவினர்களிடம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.இதனைத்தவிர இரண்டு பெண்களினதும் மூன்று ஆண்களினதும் சடலங்களே தற்சமயம் அடையாளம்காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது

இதேவேளை கடந்த திங்கட்கிழமை இந்தச் சடலங்களில் இறுதியாக புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் கடற்கரைப்பகுதியில் ஆண் ஒருவரது சடலம் கரையொதுங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(பா)

# கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கிழக்கு அண்ணமார் பாமாருக்மணி சமேத வேணுகோபாலர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ்உற்சவத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 26ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது.

27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் 28ஆம் ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும், 29ஆம் திகதி திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறவுள்ளது..

(120)

வெள்ளி நற்சிந்தனை...



# செய்யும் தொழிலே தெய்வம்

காசியில் ஒரு பக்தர் இருந்தார். அவர் செருப்புத் தைக்கும் தொழிலாளியாவார். கங்கைக்குச் செல்லும் வழியில் ஓரத்தில் உட்கார்ந்து செருப்புக்களைத் தைப்பது, அதனால் கிடைக்கும் வருவாயைக் கொண்டு திருப்தியுடன் வாழ்க்கையை நடாத்தி வந்தான்.

கிரகணதினம் கங்கையில் நீராடினால் புண்ணியம் கிடைக்கும். ஒரு தினம் அந்தணர் ஒருவர் கங்கையில் நீராடச் சென்று கொண்டிருந்தார். அந்தணரின் செருப்பு சடாரென்று அறுந்து விட்டது. செருப்பை வழியில் இருந்த தொழிலாளியிடம் தைக்கக் கொடுத்தார் அந்தணர், தொழிலாளியிடம் "ஏனப்பா இன்று கிரகணதினம், கங்கையில் நீராடினால் புண்ணியம் கிடைக்கும் அதற்காக நான் இருபது மைல் தூரத்தில் இருந்து வருகிறேன். நீ என்னடா என்றால் கங்கைக்கு இத்தனை சமீபத்தில் உட்கார்ந்து கொண்டு அதில் நீராடச்செல்லாமலிருக்கிறாயே" என்று கேட்டார் "ஐயா, நான்ஏழை கங்கையில் நீராடச் சென்றால் என் வயிறு எப்படி நிரம்பும்? என் குழந்தைகளுக்கு யார் சாப்பாடு போடுவார்கள்?" இதற்குள் செருப்பு தைத்து முடிந்து விட்டதனால், அந்தணர் முன்வந்தார். அந்தணர் கூலி கொடுத்தார். தொழிலாளி இதை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் ஆனால் அதற்குப் பதில் எனக்கு ஓர் உதவி செய்யுங்கள் என்றான். பையொன்றிலிருந்து சில பாக்குகளை எடுத்தான் அந்தப் பாக்குகளை நான் கங்கையம்மனுக்கு காணிக்கையாகக் கொடுத்ததாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவள் கையைநீட்டினால் தான்கொடுக்க வேண்டும். தண்ணீரில் தூக்கி எறிந்துவிட்டு வரக கூடாது என்றான்.

கங்கையம்மன்வந்து கையை நீட்டி வாங்கிக் கொள்வதாவது என்று நினைத்துக் கொண்டு அந்தணன் அந்தப் பாக்கை வாங்கிக் கொண்டு கங்கையை நோக்கிச் சென்றான். அந்தணன். கங்கையில் நீராடி தம்முடைய அனுட்டானங்களை முடித்தார் பிறகுதான் அவருக்கு பாக்கின் ஞாபகம் வந்தது. கரையில் நின்றபடி கூலிக்காரன் கொடுத்த பாக்கு கங்கையம்மனே பெற்றுக் கொள எனக் கூறி கங்கையில் வீச முயன்றார். என்ன ஆச்சரியம் கங்கை நீரில் ஒர் அழகிய கை வெளியே வந்துபாக்குகளைப் பெற்றுக் கொண்டது.

கிரியைகள் மனதுடன் சம்பந்தப்பட்டதாகும். மனதுடன் ஒன்றாக்காமல் செய்யப்படும் எந்தச் செயலும் பயன்தராது. செய்யும் தொழிலை சிறப்பாகச் செய்தால் இறைவன் காட்சிதருவான் என்பது உண்மையாகும்.

சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்

# பதிவிறக்கப் பெட்டகம்

தமிழருவி மணியன் அவர்கள் வாலி சமூக அநீதிகளைக் கண்டு கொதித்த ஒரு சமூகப் பொறுப்புள்ள கவிஞனாக திகழவில்லை என்று விமர்சித்தார். ஒரு ஓவியனிடமோ இசைக் கலைஞனிடமோ நீ சமூக அநீதியைக் கண்டு ஏன் கொதிக்கவில்லை என்று யாரும் கேட்பதில்லை. ஆனால் எழுத்தாளனிடம் மட்டும் இந்தக் கேள்வி தொடர்ந்து கேட்கப்படுகிறது. ஏன் ஒருவன் வாழ்நாளெல்லாம் கஸல் காதல் கவிதைகளை மட்டும் எழுதும் ஒரு கவிஞனாக இருந்தால்தான் என்ன? வைக்கம் முகமது பஷீரை ஒரு சமூகப் போராளி என்பதற்காகவா கேரள சமூகம் கொண்டாடுகிறது? ஒரு கவிஞனையோ எழுத்தாளனையோ ஏற்பதை அவனது சமூக – அரசியல் நிலைப்பாடுகள் வழியாகவே செய்ய வேண்டும் என்பது இங்கு எழுதப்படாத சட்டமாக மாறிவிட்டது. இதனால் பல முக்கியமான படைப்பாளிகள் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறர்கள். பல போலிப் படைப்பாளிகள் முன்னிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அரசியல் குண்டாந்தடிகளால் இலக்கிய அளவுகோல்களை உருவாக்குவதை நிறுத்தாமல் நமக்கு மீட்சியில்லை.

– மனுஷ்ய புத்திரன்

இப்ப தாகூர் உங்களுக்குப் பிடிக்குது. சரத் சந்திரர் பிடிக்குது. டால்ஸ்டாய் படிக்கிறீங்க. அதெல்லாம் உங்களை எப்படி பாதிக்குது? அவங்கள் எல்லாம் மண் சார்ந்தோ பூமி சார்ந்தோ பூகோளம் சார்ந்தோ இல்லை. இப்ப கம்பராமாயணம் ஏதோ ராமன் என்று ஒரு ராஜா இருந்தான் என்றுதான் கதை. அதைத்தான் எழுதியிருக்கார். ஆனால் கம்ப ராமாயணம் எவ்வளவு சுவையா இருக்கு சொல்லுங்க. அந்த இலக்கியத்தினுடைய ஆளுமை இன்னும் நின்றுகொண்டிருக்கிறது படிச்சா நம்மை உள்ளே இழுத்துக்கொள்கிறது. அதுக்கெல்லாம் இப்படிச் சொல்ல முடியுமா? உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு ராஜாவுடைய வாழ்க்கையைச் சொல்லுது என்று சொல்ல முடியுமா, அல்லது முற்போக்கு இலக்கியம் இல்லை என்று சொல்ல முடியுமா? இலக்கியத்தை அப்படி எல்லாம் பிரிக்க முடியாது.

– வண்ணநிலவன்

சங்கப்பாடல்களின் எந்த படைப்பாசிரியரையும் நமக்கு தெரியாது. படைப்பாசிரியரை நாம்தான் உருவாக்குகிறோம் அவரது பிரதியிலிருந்து. சான்றாக காக்கை பாடினியார் என்ற பெயர் நாம் பிரதியிலிருந்து உற்பத்தி செய்த படைப்பாசிரியரின் பெயர்தானே தவிர அப்பிரதியை எழுதியவரின் பெயரல்ல. ஆக, பிரதிக்குரிய படைப்பாசிரியனின் பெயர் என்பது தனிச்சொத்தை அடிப்படையாகக்கொண்ட முதலாளியத்தின் விளைவாக உருவானதே. இங்கு எழும் கேள்வி படைப்பாசிரியனாக உள்ள ஒரு எழுத்தாளனின் சமூக வாழ்வு படைப்பில் அல்லது பிரதியில் என்ன வகிபாகத்தை வகிக்கிறது என்பதே? இதற்கான பதிலை மொழிக்கும் படைப்பிற்குமான உறவிலிருந்தே பெறமுடியும். ஒரு படைப்பை கட்டுவது மொழி என்றால், மொழியை கட்டுவது சமூகம். ஆக, சமூகம் மொழியாக படைப்பாசிரியனின் ஆழ்மனமாக கட்டமைந்து உள்ளது எனலாம். படைப்பாசிரியனும், வாசகனும், பிரதியும், சமூகமும் தொடர்புறுவது மொழிவழியாகவே. சமூகவயமாகிவிட்ட மொழியால் வெளிப்படுத்தப்படும் படைப்பானது, படைப்பாசிரியனின் ஆழ்மனக்கட்டுமானத்தின் வழியாக வெளிப்படுகிறது. அதாவது பிரதி என்பது சமூகம், படைப்பாசிரியன், வாசகன் என்கிற மொழி–நெசவில் நெய்யப்படும் பொருளே. இதன்பொருள், ஒவ்வொரு சமூகத்திலும் பிரதி ஒவ்வொரு விதமாக நெய்யப்படும். பிரதி என்பது முற்றுமுழுதான பொருள் அல்ல. செயலில் உருவாகும் இயக்கத்தில் இருக்கும் ஒன்று. ஆக, பிரதியை கட்டுவதும் கலைப்பதும் வாசிப்பே.


– ஜமாலன்

எழுத்தாளன் காரணராகவும், எழுத்து ஆசிரியனின் தனிச்சொத்தாகவும் மாறிவிட்ட இன்றைய நவீன சமூகத்தில், கதைகளை இலக்கிய ஆசிரியரின் படைப்பாக்கமாக கருதுவதும், அதன் ஆழ, அகலங்கள் மற்றும் நீள, உயரங்களை அந்த ஆசிரியரை வைத்து மதிப்பிடுவதும் இயல்பானதாக கருதப்படுகிறது. கதைகளின் வழி படைப்பாசிரியனை மதிப்பிடுவதற்கு மாறாக, ஆசிரியன்வழி கதையை மதிப்பிடும் போக்கு முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. இது 17–ஆம் நூற்றாண்டிற்கு பிறகு உருவான சொத்துரிமை மற்றும் காப்புரிமை சார்ந்து உருவானதே. செவ்வியல்கால சமூகங்களில் தனிப்பட்ட படைப்பாசிரியன் எந்த ஒரு படைப்பின் உரிமையாளனாகவும் இருந்திருக்கவில்லை. ஆனால், நவீனசமூகம் படைப்பை ஆசிரியனின் உரிமையாக மாற்றிவிட்டது. அந்த உரிமை படைப்பாசிரியனின் பரிசாகவும், தண்டனையாகவும் மாறிவிட்டது. இப்படி எழுத்தை சொத்தாக கருதி படைப்பாசிரியனின் உரிமையாக மாற்றியதன்மூலம், அந்த படைப்பாசிரியனை அதிகாரம் தன்வயப்படுத்திக் கொள்கிறது. அவனை தனது கண்காணிப்பிற்குள் நிறுத்திவிடுகிறது. அவனை அந்தக் கால சொல்லாடல் வெளிதாண்டி எழுதமுடியாமல் செய்துவிடுகிறது. படைப்பாசிரியனை அக்காலத்தின் சரித்திரவிளைவாக மாற்றிவிடுகிறது.

– மிஷேல் ஃபூக்கோ

## டி சி டி அடங்கிய பால்மாக்களை

# விற்பனையிலிருந்து விலக்கபணிப்பு




டிசிடி அடங்கிய பால்மாக் களை விற்பனையிலிருந்து விலக்குமாறு சுகாதார அமைச்சு அவசரப் பணிப்புரையை விடுத்து ள்ளது. பால்மா சம்பந்தமான அனைத்து வர்த்தக விளம்பரங் களையும் அச்சு மற்றும் இலத்திர னியல் ஊடகங்களில் மறு அறிவித்தல் வரை தடை செய்வத ற்கும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சுகாதார அமைச்சு இந்தத் தீர்மானத்தை வெளியிட்டு ள்ளது.

பால் மா தொடர்பாக தற்போது எழுந்துள்ள நெருக்கடியான நிலைமையைக் கருத்திற் கொண்டு அனைத்து பால் மா வகைகளை யும் பரிசோதனைக்கு உட்படுத்த சுகாதார அமைச்சின் உணவு ஆலோசனைக்குழு தீர்மானித்து ள்ளது. இதேவேளை பால் மா தொடர்பில் எழுந்துள்ள நிலமை யைக் கருத்திற் கொண்டு உணவு ஆலோசனைக் குழுவி னால் முன்வைக்கப்பட்ட சிபாரி சுக்கு அமைய சுகாதார சேவை கள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மகிபால சில தீர்மானங்களை எடுத்துள்ளார். இதற்கிணங்க டிசிடி இரசாயனம் உள்ளடங்கியுள்ளதாக சந்தேகிக் கப்படும் பால்மாவின் மாதிரி நேற்று முன்தினம் முதல் கைத் தொழில் தொழில் நுட்ப நிறுவ னத்தின் பரிசோதனைக்கு உட்படு த்தப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி நிறுவனத்தினால் டிசிடி இரசா யனம் கலக்கப்பட்டுள்ளதாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள பால் மா வகைகளை விற்பனை யிலிருந்து விலக்கிக் கொள்ளு மாறு சம்பந்தப்பட்ட நிறுவனங் களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க மெலிபன் நிறுவ னம், பொன்டேரா நிறுவனம், ஜீ.எம்.மொகமட் அலி நிறுவனம் ஆகியவற்றுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் டிசிடி உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட அங்கர் 1+ அங்கர் முழு ஆடைப் பால் மா, மெலிபன் முழு ஆடைப் பால்மா, டயமண்ட் முழு ஆடைப் பால்மா ஆகியவற்றை உடனடியாக வர்த்தக நிலையங்களிலிருந்து விலக்கிக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிண ங்க மறுஅறிவித்தல் வரை அனைத்துப் பால்மா விளம்பரங் களையும் வெளியிடுவதை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அக்குழு நிறுவனங்களின் பிரதானிகளைக் கேட்டுக் கொண் டுள்ளது.

## தபால் மூலவாக்களிப்பு

# வடக்கில் இன்று ஆரம்பம்

நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பு இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அ.அச்சுதன் தெரிவித்தார்.வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக கடந்த 2 ஆம் திகதி அரச உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்தனர்.

விண்ணப்பித்தவர்களில், தகுதியானவர்கள் இன்று முதல் வாக்களிக்க முடியுமென்றும் அவர் மேலும் கூறினார்.

(25)

## பயங்கரவாத தடைச்சட்டத்தில்

# கைதான இளைஞன் விடுதலை

பயங்கரவாத தடைச் சட்டத் தின் கீழ் கைதுசெய்யப்பட்ட இளைஞரை யாழ். மேல் நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளித்துள்ளது.

உரும்பிராய் மேற்கு பகுதி யைச் சேர்ந்த சாகரப்பிள்ளை பிரபாகரன் தமிழகன் (வயது 30) என்ற இளைஞரே, கடந்த 2009 மே மாதம் 15 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பகுதியில் கைது செய்யப்பட்டார்.

இவர், கொழும்பு பிரதான நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப் பட்டதையடுத்து விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு எதிரான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தி னால், யாழ். மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து கடற்படை மீது தாக்குதல் மேற்கொண்டதாக குற்றஞ் சாட்டப்பட்டே இவர் கைது செய்யப்பட்டார்.

அதன் பின்னர் அவரால் அளி க்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் யாழ். மேல் நீதிமன்றினால் 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதியன்று நிராகரிக் கப்பட்டது.அத்துடன்,இவருக்கு எதிரான வேறு சான்றுகள் உள்ளனவா என பரிசீலனை மேற்கொள்வதற்காக மேற்படி வழக்கு நேற்று முன்தினம் வரை ஒத்தி வைக்கப்படடிருந்தது.

# ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்ப 850 பட்டதாரிகளுக்கு நியமனம்

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங் களை நிரப்பும் வகையில் பட்ட தாரிகளை இணைத்துக் கொள் வதற்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் பந்துல குண வர்தன தெரிவித்துள்ளார்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு 850 ஆசிரி யர்கள் இணைத்துக் கொள் ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட் டுள்ளார்.

இதற்கான எழுத்து மூலப் பரீட்சை வர்த்தமானி அறிவித்தல் படி நடைபெற்றுள்ளது. அதில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் நேர் முகத் தேர்விற்கு அழைக்கப் படுவர் எனவும் மூன்றாம் தவணை பாடசாலை ஆரம்பத்தின்போது அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்




மூன்று தலைமுறைக்கு மேலாக எமது கிராமத்திற்கு இது வரைக்கும் மின்சாரம் கிடைக் கவில்லை.தற்பொழுது எமது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியினால் எமது கிராமத்திற்கு மின்ஒளி 09.08.2013 இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கவுள்ளார். அவரை இந்நாளில் எமது பூம்புகார் கிராமத்து மக்களாகிய நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அடுத்து எமது கிராமத்திற்கு பலவழிகளிலும் மின்சாரம் வழங்குவதற்கு உதவியாக இருந்த யாழ் .நாடாமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (S.A.உதயன்) அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் மாகாணசபை உறுப்பினர் இல.10 அவர்களிற்கும் இந்நாளில் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு அவர் மாநகரசபைத் தேர்தலில் வெற்றிபெறவேண்டும் என்று பூம்புகார் மக்களாகிய நாம் வாழ்த்துகின்றோம்.

அடுத்து எமது கிராமத்து மக்களோடு மக்களாக நின்று நேரகாலம் பாராது எமக்கு மின்சாரம் பெற்றுத்தருவதற்கு உதவியாக இருந்த நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச சபை அமைப்பாளர் அ.ரவீந்திரதாசன் அவர்களிற் கும் பாராட்டுத் தெரிவிப்பதோடு நன்றியுடையவர்களாகவும் இருப்போம் என்பதையும் இந்நாளில் தெரிவித்துக்கொள்கின்றோம்.




பூம்புகார் வாழ் மக்கள்
பூம்புகார் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
பூம்புகார் கிராம அபிவிருத்திச் சங்கம்
பூம்புகார் கடற்றொழில் சங்கம்
பூம்புகார் சனசமூக நிலையம்.


❖ பின்வரும் வாக்கியங்களினது வாக்கிய அமைப்பு சரியானது எனின் ( ✓ ) எனவும் பிழையானது எனின் ( ✗ ) எனவும் அடையாளம் இடுக.

28. மரங்கள் காற்றில் அசையக்கூடியது. ( )
29. மக்கள் கூட்டம் அலை மோதியது ( )
30. குழந்தை நித்திரை விட்டு எழுந்து அழுதான் ( )

❖ 31ஆம், 32ஆம் வினாக்களுக்கு அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படுக.


31. இலங்கையின் தேசிய கொடியை வடிவமைத்தவர் மாபொலாகம விபுலாச்சாரஹிமி எனின் அடைப்பினுள் M என எழுதுக. அவ்வாறு இல்லை எனின் அடைப்பினுள் P என எழுதுக. ( )

32. உலக புத்தக தினம் கொண்டாடப்படுவது ஏப்ரல் 23ஆம் திகதி எனின் அடைப்பினுள் △ வரைக அவ்வாறு இல்லை எனின் அடைப்பினுள் □ வரைக. ( )

33.



இது ஓர்
1. அறிவித்தல் 2. விளம்பரம் 3. துண்டுப்பிரசுரம்

34. [24 ÷ 2] கூட்டில் உள்ள பிரசினத்தின் பெறுமதிக்கு சமனான வேறு பிரசினத்தை தெரிவு செய்க.
1. [9 + 4] 2. [16 - 6] 3. [4 × 3]

35. சகல வாகனங்களுக்கும் வீதி மூடப்பட்டுள்ளது. என்பதை குறிக்கும் வீதி குறியீட்டை தெரிவு செய்க.
1. 
2. 
3. 

36. ஒரு குறிப்பிட்ட எண்ணில் இருந்து 4 ஐ கழித்து இரண்டால் பெருக்கினால் வரும் விடை 10 எனின் அந்த எண் யாது?
1. 6 2. 8 3. 9

37. [PE] இவ்வட்டையை முகம் பார்க்கும் கண்ணாடி முன் பிடிக்கும் போது தோன்றும் வடிவம் எது?
1. [ꟼƎ] 2. [PE] 3. [Ǝꟼ]


38. துடுப்பந்தாட்டப் போட்டி ஒன்றில் கங்குலியை விட ராவிட் கூடிய ஓட்டங்களை பெற்றாலும் சச்சினைவிட குறைந்த ஓட்டங்களையே பெற்றார். எனின் கூடுதலான ஓட்டங்களை பெற்ற வீரர் யார்?
1. கங்குலி 2. ராவிட் 3. சச்சின்

❖ **39ஆம், 40ஆம் வினாக்களில் உள்ள எண்தொடரின் ?- இக்குறி இடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய எண்ணை தெரிந்து கோடிடுக.**

39.



-?- இக்குறி இடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய எண் யாது?
1. 14 2. 28 3. 22

40.



-?- இக்குறி இடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய எண் யாது?
1. 40 2. 30 3. 35




# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013


பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



❖ முதலில் இரண்டு உருக்களுக்கும் இடையிலான தொடர்பினை அவதானித்து மூன்றாவது உருவுடன் தொடர்புடைய விடையினை தெரிவு செய்க.




01.

1. 2. 3.

02.

1. 2. 3.

❖ **3ஆம் 4ஆம் வினாக்களில் பிழையான கருத்து இடம் பெறும் விடையை தெரிவு செய்க.**

03. 1. கோள்கள் சூரியனை நீள்வட்டப்பாதையில் சுற்றுகின்றன.
2. கிவி நியூசிலாந்து நாட்டின் தேசியப்பறவை.
3. இலங்கைக்கு கிழக்கே ஆபிரிக்க நாடுகள் உள்ளன.

04 1. வித்துக்களை பயன்படுத்தி செய்யப்படும் ஆக்கம் கொலாஜ் ஆகும்.
2. சதுரங்கம் ஓர் உள்ளரங்க விளையாட்டாகும்.
3. அபயகிரி விகாரை அனுராதபுரத்தில் உள்ளது.


05. வேறுபடும் உருவின் கீழ் கோடிடுக.
1. 
2. 
3. 

❖ **புகையிரதநிலையத்திலிருந்து புறப்படவுள்ள புகையிரதம் பற்றிய நேரசூசி கீழே காணப்படுகிறது.**


| பயணமுடிவிடம் | புறப்படவுள்ள நேரம் | | வேறுகுறிப்பு |
|---|---|---|---|
| | மு.ப | பி.ப | |
| வவுனியா<br>கண்டி<br>பதுளை<br>காலி | 5.15<br>8.45 | 1.20<br>2.55 | 30 நிமிடம் தாமதம் |

06. வவுனியா புகையிரதம் புறப்பட்டு எவ்வளவு நேரத்தின் பின் கண்டி புகையிரதம் புறப்படும்?
1. 2மணி 45நிமிடம் 2. 3மணி 15நிமிடம் 3. 3மணி 30நிமிடம்

07. பதுள்ள புகையிரதம் எத்தனை மணிக்கு புறப்படும்
1. பி.ப 1.40 2. பி.ப 1.50 3. பி.ப 12.50


08. 


இப்பரிசோதனை மூலம் வளியின் எந்த இயல்பை அறியலாம்.
1. வளி இடத்தை அடைக்கும்
2. வளி வெப்பம் ஏற்றும் போது விரிவடையும்
3. வளிக்கு நிறை உண்டு

09. 

இவ்வாக்கத்துடன் நெருங்கிய தொடர்புடைய விடையின் கீழ்கோடிடுக.
1. காற்றின் வேகத்தை அறிய உதவும்
2. காற்று வீசும் திசையை அறிய உதவும்
3. திசையை அறிய உதவும்


10. காமேஸின் வயது 14 வருடங்கள் ஆரணியின் வயது இரண்டு வருடங்கள் இன்னும் எத்தனை வருடங்களின் பின்னர் காமேஸின் வயது ஆரணியின் வயதைப் போல் மூன்று மடங்காக இருக்கும்.
1. 3 வருடங்கள் 2. 4 வருடங்கள் 3. 2 வருடங்கள்


11. 


தரப்பட்ட வெட்டுருவை மடித்து ஒட்டுவதால் பெறக்கூடிய சதுரமுகிக்குற்றியை தெரிவு செய்க.

1. 


2. 


3. 



12. 


தரப்பட்ட வெட்டுருவை மடித்து ஒட்டுவதால் பெறமுடியாத வெட்டுருவை தெரிந்து கோடிடுக.


1. 

2. 

3. 


13. 

நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னம்.
1. $\frac{1}{5}$ 2. $\frac{1}{6}$ 3. $\frac{1}{8}$

14. 


இவ்வுருவில் சட்டக்காந்தம் ஒன்று நடுவில் நூலொன்றினால் கட்டி தொங்க விடப்பட்டுள்ளது. அதன்படி பின்வரும் கூற்றுக்களின் மிகச் சரியானது
1. A பக்கம் வடக்கு திசையை நோக்கி நிற்கும்
2. B பக்கம் தெற்கு திசையை நோக்கி நிற்கும்
3. A பக்கம் அல்லது B பக்கம் வடக்கு திசையை நோக்கி நிற்கும்


15. கண்ணாடிப் போத்தல் ஒன்று இரண்டாக வெடித்துள்ள முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது.இப்போத்தலை வெடிப்பின் வழியே பிரித்து எடுத்தால் அமையும் உருவை தெரிவு செய்க.


1. 
2. 
3. 



16. கொதிநீர் பாத்திரத்தினுள் போடப்பட்ட 6 முட்டைகள் அவிவதற்கு 6 நிமிடங்கள் தேவை எனின் ஒரு முட்டை அவிய எடுக்கும் நேரம் யாது?
1. 1 நிமிடம் 2. 6 நிமிடம் 3. 3 நிமிடம்

17. சாதனா தனது நான்காவது பிறந்ததினத்தை 29.02.2008ம் ஆண்டு கொண்டாடினாள். அவள் தனது அடுத்த பிறந்ததினத்தை எத்தனையாம் ஆண்டு கொண்டாடுவாள்.
1. 29.02.2009 2. 29.02.2010 3. 29.02.2012

18. 



உருவின் சுற்றளவு யாது?
1. 38cm 2. 42cm 3. 21cm

❖ **விடுகதைகளுக்கு பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**


19. மரத்துக்கு மரம் தாவுவான் குரங்கல்ல பட்டை அடித்திருப்பான் சாமியாருமல்ல அவன் யார்? ...................

20. அள்ள அள்ள பெரிதாகும் அது என்ன? ..........................

❖ **கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையின் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

21. 

இங்கு அதிகளவு காணப்படுவது
1. தளவடிவங்கள் 2. திண்மஉருக்கள் 3. கனவுருக்கள் (..............)

22. 

இக்குறியீடு குறிப்பது.
1. மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடியது 2. நெருங்கக்கூடியது
3. கவனமாக கையாளுதல் (..............)

23. 




இந்த உரு வரிசையில் 23வதாக அமையும் வடிவம் எது?


1. 
2. 
3. 
(..............)

24. காலையில் கிழக்கு வானில் சூரியன் உதிக்கின்றது.
1. இது எப்போதும் உண்மையாகும்
2. இது பெரும்பாலும் உண்மையாகும்
3. இது ஒரு போதும் உண்மையன்று (..............)

25. வானம் கறுக்கிறது, குளிர்காற்று வீசுகிறது மழை பெய்யப்போகிறது.
1. இது எப்போதும் உண்மையாகும்
2. இது பெரும்பாலும் உண்மையாகும்
3. இது ஒரு போதும் உண்மையன்று (..............)

26. முதலிரு உருக்களையும் இணைப்பதால் பெறக்கூடிய உருவை தெரிவு செய்க.


1. 
2. 
3. 
(..............)

27. 

வட்டம் ஒன்றின் விட்டம் 2cm எனின் செவ்வகத்தின் சுற்றளவு யாது?
1. 8cm 2. 12cm 3. 14cm (..............)

# தேர்தல் சுவரொட்டிகள், பதாகைகளை காட்சிப்படுத்தினால் சட்ட நடவடிக்கை

## யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தல், சுவரொட்டிகள், பதாகைகள் ஒட்டுதல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அ.அச்சுதன் தெரிவித்தார்.

வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்கள் தேர்தல் திணைக்களத்தினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தேர்தல் சட்டங்களுக்கு அமைய வேட்பாளர்களின், கட்சிகளின் அலுவலகங்கள் தவிர்ந்த பொது இடங்களில் பதாகைகள், சுவரொட்டிகள் ஒட்டப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வேட்பாளர்களின் வாகனம் தவிர்ந்த ஒலிபெருக்கி விளம்பரம், மற்றும் வீடு வீடாக துண்டுப்பிரசுரங்கள் விநியோகிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. தேர்தல் சட்டவிதிகளுக்கு முரணான வகையில் பிரசாரம் செயயும் வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் பிரசாரம் தொடர்பான சட்டவரைபு தேர்தல் திணைக்களத் தினால் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸ் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தேவை ஏற்படும் பட்சத்தில் கைது செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கூட்டங்கள நடைபெறும் இடங்களில் பதாகைகள், சுவரொட்டிகள் காட்சிப்படுத்தலாம்.

ஆனால் கூட்டங்கள் நிறைவடையும் போது அவை அகற்றப்படல் வேண்டும். பொலிஸாரின் அனுமதி பெற்றே ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

வேட்பாளர்களின் அலுவலக எல்லைக்கு வெளியே கொடிகள், பதாகைகள் கட்டுவதும் தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். எனவே வீதிகளில் பொது இடங்களில் பதாகைகள் காட்சிப்படுத்தல், துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல், போன்ற சட்டத்திற்கு முரணான பிரசாரங்களை தவிர்த்துக்கொள்ளுமாறு அனைத்துக் கட்சிகளிடமும் வேட்பாளர்களிடமும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ,25)

# தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளும் திகதி நீடிப்பு

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல்கள் திணைக்களம் விநியோகிக்கும் தற்காலிக அடையாள அட்டைகளை பெறுவதற்காக விண்ணபிக்க வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் செப்ரெம்பர் மூன்றாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் தோட்ட அதிகாரிகளிடம் பெற்றுக்கொள்ளுமாறு தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, தேசிய அடையாள அட்டைக்கான புகைப்படத்திற்கு ஒப்பான இரண்டு புகைப்படங்களுடன் தோட்ட அதிகாரி அல்லது கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, மதகுருமார்களுக்கான அடையாள அட்டை, தேர்தல்கள செயலகம் அல்லது ஆட்பதிவுத் திணைக்களம் வெளியிட்ட தற்காலிக அடையாள அட்டைகளை மாகாண சபைத் தேர்தலின் போது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# முன்னேஸ்வரம் காளிகோவிலில் இம்முறையும் பலிபூஜை இரத்து

(கொழும்பு)

முன்னேஸ்வரம் காளி கோவிலில் வருடாவருடம் நடாத்தப்படும பலிப்பூஜையை இம்முறை நடத்தாமல் விடுவதற்கு கோவில் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

புத்தளம் மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் புத்தளம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கீத்திசிறி கதேகம, சிலாபம் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சாலிய சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சிலாபம், முன்னேஸ்வரம் காளி கோவிலில ஒவ்வொரு வருடமும் ஆகஸ்ட் மாதம் பலிப்பூஜை நடத்தப்படும். இந்தப் பூஜை நடத்தப்படுவது தொடர்பில் பல்வேறு அமைப்புகள் தங்களுடைய எதிர்ப்புக்களை வெளிக்காட்டியிருந்தனர்.

இந்தப் பலிப்பூஜைக்கு எதிராக தேரர்கள் இந்த ஆலயத்திற்கு முன்பாக ஒருமுறை சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். அத்துடன், மிருக வதைக்கு எதிராக அமைப்பொன்று தாக்கல் செய்த மனுவை விசாரித்த சிலாபம் நீதவான் நீதிமன்றம் பலிப்பூஜையை கைவிடுமாறு 2011 ஆம் ஆண்டு உத்தரவிட்டது.

அத்துடன், காளிகோவிலுக்குச் சென்ற அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையிலான குழுவினர் அங்கு பலிப்பூஜைக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த மிருகங்களை பலவந்தமாக எடுத்துச் சென்றுவிட்டனர்.

இவ்வாறான நிலையிலேயே இம்முறை பலிப்பூஜையை நடத்தினால் பல்வேறு எதிர்ப்புகளுக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்பதனால் பலிப்பூஜையை நடத்தாமல் விடுவதற்கு இம்முறை ஆலய நிர்வாகம் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

# வெளிநாடு சென்ற பேராசிரியர்களை மீளவும் திரும்ப அழைக்க ஏற்பாடு

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் பேராசிரியர்களை திரும்ப அழைக்கும் தீர்மானமொன்றை மேற்கொண்டுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் கலாநிதி ஷெனிகா ஹிரிம்புரேகம தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பேராசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுவதால்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவுடனான உடன்படிக்கைகளுக்கு அமைய பல பேராசிரியர்கள் கடந்த 30 ஆண்டுகளில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள நிலையில் அவர்களில் பலர நாட்டுக்குத் திரும்பிவரவில்லை.

வடக்கு, கிழக்கு பல்கலைக் கழகங்களுக்கு, குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு பேராசிரியர்களின் தேவை அதிகமாகவே உள்ளது.

பல துறைகளிலும் பேராசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. எனவே, வெளிநாட்டிலுள்ள இலங்கையைச் சேர்ந்த பேராசிரியர்களைத் திரும்ப அழைத்துக் கொள்வதன் மூலம் குறித்த வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யமுடியும் என அவர் தெரிவித்துளளார்.

# 15 வயதிற்கு குறைந்தவர்களும் எயிட்ஸ் நோயினால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்கான நிலையில் 4,100 பேர் வாழ்வதாகவும் அதில் 100 பேர் 15 வயதிற்கும் குறைந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

2013 ஆம் ஆண்டு இதுவரை எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படடு 16 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு அறிவித்துள்ளது. இந்நிலையில், முதலாவது காலாண்டில் 9 பேரும் இரண்டாவது காலாண்டில் 7 பேரும் எயிட்ஸ் நோயால் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தத் தொற்றுக்கு இலக்கானவர்களில் 260 பேர் 2011 ஆம் ஆண்டு உயிரிழந்துள்ளனர் என்றும் அப்பிரிவு அறிவித்துள்ளது.

மேலும், 2013 ஆம் ஆண்டு இதுவரையில் 1,693 பேர் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இந்நிலையில், 2013 ஆம் ஆண்டு முதல் இரண்டு காலாண்டுகளின் 1,041 ஆண்களும் 698 பெண்களுமென 1,739 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டில் 457 பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 310 ஆண்களும் 147 பெண்களும் அடங்குகின்றனர்.

# மாணவரிடமிருந்து பணம் பெறாதீர் இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் பெறவேண்டாம் என்று கல்வி அமைச்சு பல சுற்றறிக்கைகளை வெளியிட்ட பின்னரும் அதற்கு மாறாக பல பாடசாலைகள் பணம் பெறுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.


இது பற்றிக் கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப்ஸ்ராலின்,


தற்போது நகர்ப்புறப் பாடசாலைகள் மட்டுமன்றி கிராமப் புற பாடசாலைகளும் மாணவர்களிடமிருந்து நன்கொடை என்ற பெயரில் பெருந்தொகைப் பணத்தை பெற்றுக்கொள்கின்றன.

மேலும் பணம் பெறுவதற்காக சட்டைகள், தொப்பிகள், முத்திரைகள் போன்ற பல பொருட்களை விற்பனை செய்கின்றனர். இவற்றை விற்பனை செய்வது தவறல்ல ஆனால் அவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்யக்கூடாது எனத் தெரிவிததுள்ளார்.

இலங்கை அரசாங்கம் மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்குகின்றபோதும் சில பாடசாலைகள் பெருந்தொகைப் பணத்தை மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. இது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் பணம் செலுத்த முடியாத ஏழை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.








கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக சந்தைக்கு விஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அங்கு வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கேட்டறிந்துகொள்வதனையும், சந்தையில் சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் வகையில் தேநீர் கடைக்கு மிக அருகில மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதனையும் கழிவுகள் அகற்றப்படாது தேங்கி நிற்பதனையும் காணலாம். (29)

# ஸ்நோடனுக்கு அரசியல் தஞ்சம்

# ஒபாமா, புடின் சந்திப்பு இரத்து



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவிற்கும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் இடையில் இடம்பெறவிருந்த சந்திப்பு இரத்து செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புலனாய்வு இரகசியங்களை வெளியிட்ட ஸ்நோடனுக்கு ரஷ்யா அடைக்கலம் வழங்க முடிவு செய்திருப்பதையடுத்தே, இரு தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஜீ - 20 நாடு களின் பொருளாதார மாநாட்டின்போது, ரஷ்ய ஜனாதிபதியை சந்திக்க, அமெரிக்க ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார். எனினும் தற்போது, இருவருக்குமிடையிலான சந்திப்பு இடம் பெற மாட்டாதென வெள்ளை மாளிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் ஜீ - 20 நாடுகளின் பொருளாதார மாநாட்டில், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கலந்துகொள்ளவுள்ளதை, வெள்ளை மாளிகை உறுதிசெயதுள்ளது.

இதேவேளை அமெரிக்க புலனாய்வு இரகசியங்களை வெளியிட்ட ஸ்நோடன், கடந்த சில வாரங்களாக ரஷ்யாவின் மொஸ்கோ விமான நிலையத்தில் தங்கியிருந்தார். அவருக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகள் பல அரசியல் தஞ்சம் வழங்க முன்வந்திருந்தன. எனினும் ஸ்நோடனுக்கு மொஸ்கோவிலிருந்து வெளியேறுவதில் பிரச்சினைகள் காணப்பட்டன. இவ்வாறான நிலையிலேயே ஸ்நோடனுக்கு அடைக்கலம் வழங்க ரஷ்யா தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தாவில் ஆரம்பம் தாய்ப்பால் வங்கி

(கொல்கத்தா)

இந்தியாவின் முதல் தாய்ப்பால் வங்கியை மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, நேற்று முன்தினம் கொல்கத்தாவில் தொடக்கி வைத்தார். பிறந்த குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புத் திறனையும், ஆரோக்கியத்தையும் அளிக்க வல்லது தாய்ப்பால். இரண்டு வயது வரை தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் மிகவும் ஆரோக்கிய மானதாக வளரும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால், பல்வேறு காரணங்களால், பல குழந்தைகளுக்கு தாய்ப்பால் கிடைப்பதில்லை. அத்தகைய குழந்தைகளுக்கு உதவிடும் வகை யில் வெளிநாடுகளில் தாய்ப்பால் வங்கிகள் உள்ளன. ஆனால், இதுவரை அத்தகைய வங்கிகள் எதுவும் இந்தியாவில் இல்லை. இக்குறையினைப் போக்கிடும் வகையில், மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, நேற்று முன்தினம் கொல்கத்தாவில இந்தியாவின் முதல் தாய்ப்பால் வங்கியினைத் திறந்து வைத்தார். இரத்த வங்கிகளைப் போன்று, தாய்ப்பால் தானம் பெறப்பட்டு சேமித்து வைக்கப்படும். பின்னர் தேவைப்படும் குழந்தைகளுக்கு அவை பகிர்ந்தளிக்கப்படும் என மம்தா தெரிவித்துள்ளார். மேலும், 'பிறந்த ஒரு குழந்தையின் அடிப்படைத்தேவையை இந்த புதுமையான திட்டம் நிறைவேற்றி வைக்கும். மிகுந்த கவனத்துடன் அதிநவீன வசதிகளுடன் இந்தத் தாய்ப்பால் வங்கி தொடங்கப்பட்டுள்ளது. எனவே இதில் தொற்றுநோய் ஏற்பட வாய்ப்பு இல்லை. தாய்ப்பால் பெறமுடியாத குழந்தைகளுக்கு இங்கு தாய்ப்பால் கிடைக்கும் எனக் கூறியுள்ளார்.

# எமது வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியது பாகிஸ்தான் இராணுவ சிறப்புப் பிரிவே

## ஏ.கே. அந்தோணி

(டெல்லி)



ஜம்மு காஷ்மீர் எல்லையில் இந்திய இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியது பாகிஸ்தான் இராணுவத்தின் சிறப்புப் பிரிவுதான் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி விளக்கம்அளித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இந்திய இராணுவ வீரர்கள் மீது பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் 5 வீரர்கள் பலியாகினர். இந்தச் சம்பவம் நாட்டை அதிர வைத்தது. இது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் விளக்கம் அளித்த பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி, பாகிஸ்தான் இராணுவ சீருடை அணிந்த தீவிரவாதிகள் இத்தாக்குதலை நடத்தியதாகக் குறிப்பிட்டார்.

ஆனால் இராணுவம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் பாகிஸ்தான் இராணுவத்துடன் சேர்ந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த முரண்பாடு பெரும் சர்ச்சையை உருவாக்கியது. இதனால் நாடாளுமன்ற நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முடங்கின. இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை பாரதிய ஜனதா தலைவர்களுடன் பிரதமர் மன்மோகன்சிங் ஆலோசனை நடத்தினார். அப்போது நேற்று அந்தோணி புதிய அறிக்கை ஒன்றை தாக்கல் செய்வார் என்று உறுதியளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்று லோக்சபாவில் அறிக்கையை தாக்கல் செய்த ஏ.கே.அந்தோணி, எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்தான் முன்பு அறிக்கையை வெளியிட்டேன். தற்போது இராணுவ தலைமைத்தளபதி அங்கு நேரில் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்டு என்னிடம் நடந்தது பற்றி விவரித்தார்.

இந்திய இராணுவத்தினர் மீதான தாக்குதல் கள் என்பவை பாகிஸ்தான் இரா ணுவத்தினரின் ஒத்துழைப்பு இல்லாமல் நடைபெறாது. இந்திய இராணுவ வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியது பாகிஸ்தான் இராணுவத்தின் சிறப்புப் பிரிவினர்தான். நமது பொறுமையை மிக எளிதாக பாகிஸ்தான் எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்த சம்பவத்துக்கு பாகிஸ்தான்தான் பொறுப்பு. தற்போதைய சம்பவத்தின் எதிரொலி எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிலும் பாகிஸதானுடனான உறவிலும் இருக்கும் என்று எச்சரித்தார்.

ஏ.கே. அந்தோணியின் அறிக்கையை வரவேற்ற பாஜக மூத்த தலைவர் சுஷ்மா ஸ்வராஜ், தேசப் பாதுகாப்பில் ஒருபோதும் அரசியல் செய்யமாட்டோம் என்றார்.

# மாப்பிள்ளைத் தோழனாக இருந்த இரண்டு வயது மகன் மரணம்

(வோஷிங்டன்)



அமெரிக்காவில் பெற்றோரின் திருமணத்தில் மாப்பிள்ளைத் தோழனாக இருந்த 2 வயது குழந்தை புற்றுநோயால் நேற்று முன்தினம் மரணம் அடைந் தது. அமெரிக்காவைச் சேர்ந்தவர் ஹான் ஸ்டீவன்சன். அவரது காதலி கிறிஸ்டீன் ஸ்விடோர்ஸ்கீ. அவர்களுடைய குழந்தை லோகன் ஸ்டீவன்சன (2).

லோகன் இரத்தப் புற்றுநோயால் அவதிப்பட்டு வந்தான். அவனுக்கு பல முறை அறுவை சிகிச்சை செய்தும் பலனில்லை. இந்நிலையில் கடந்த மாதம் குழந்தையை பரி சோதித்த மருத்துவர்கள் லோகன் இன்னும் சில வாரங்களில் இறந்துவிடுவான் என்று தெரிவித்தனர்.

இதையடுத்து அடுத்த ஆண்டு ஜூலை மாதம் திருமணம் செய்ய முடிவு செய்திருந்த ஹான், கிறிஸ்டீன் கடந்த வாரம் திருமணம் செய்து கொண்டனர். திருமணத்தில் லோகன் தான் மாப்பிள்ளைத் தோழனாக இருந் தான். இந்நிலையில் லோகன் நேற்று முன்தினம் இறந்துவிட்டான். இது குறித்து கிறிஸ்டீன் லிபேஸ்புக்கில் கூறுகையில், லோகன் என் கைகளில் இறுதி மூச்சை விட்டான். அவனுக்கு இனி வலி இருககாது என்று தெரிவித்துள்ளார்.

# நவாஸ், மன்மோகன் சந்திப்பு அமெரிக்காவில் சாத்தியமா?

அடுத்த மாதம் நடைபெற உள்ள ஐ.நா. சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக நியூயோர்க் செல்லும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தானின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ள நவாஸ் ஷெரீப்புடன் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் பகுதி எல்லைக் கோட்டின் அருகே அத்துமீறிய பாகிஸ்தான் இராணுவம் 5 இந்திய வீரர்களை சுட்டுக் கொன்றது. இதனையடுத்து, நியூயோர்க்கில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புடன் பிரதமர் மன்மோகன்சிங் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. பாகிஸ்தானுக்கு இந்திய அரசு தக்க பதிலடிதரவேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கூறிவருகின்றன.

இந்நிலையில், எதிர்க் கட்சிகளின் கருத்துக்கு பதில் கூறிய காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பி.சி.சாக்கோ, இரு நாட்டிற்கும் இடையிலான பிரச்சினைகளை போரினால் தீர்த்துக் கொள்ள முடியாது. கலந்தாலோசனை மற்றும் பேச்சுவார்த்தையால் மட்டுமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இதன் அடிப்படையில் நமது பிரதமர் நியூயோர்க்கில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெப்பை சந்தித்துப் பேசுவார் என்று தெரிவித்தார்

# கென்டி, மர்லின் மன்றோ உறவு; சர்ச்சையை கிளப்பும் புத்தகம்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப்.கெனடிக்கும், மறைந்த ஹொலிவுட் நடிகை மர்லின் மன்றோவுக்கும் இடையே நெருக்கமான உறவு இருந்து வந்தது. ஜோன் கென்னடி, தன்னை திருமணம் செய்து கொள்வார் என்றே மர்லின் மன்றோ கருதி வந்தார். மர்லின் மன்றோவுடனான தொடர்பால், ஜோன் கெனடிக்கும், அவருடைய மனைவி ஜக்குலின் கென்னடிக்கும் இடையே கருத்து வேறுபாடு எழுந்தது. கெனடி சுட்டுக்கொல்லப்படுவதற்கு சற்று முந்தைய காலகட்டத்தில், இருவரது திருமண வாழ்க்கையில் நிலவிய பூசல் குறித்து தற்போது கிறிஸ்டோபர் அண்டர்சன் என்பவர் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டுள்ளார். அதில், புதிய தகவல் கள் இடம் பெற்றுள்ளன.



ஒருநாள், மர்லின் மன்றோ, ஜோன் கெனடியின் மனைவிக்கு ரெலிபோன் செய்து, கெனடியுடனான தொடர்பை வெளிப்படையாக கூறியுள்ளார். மனைவியை விட்டு பிரிந்து வந்து, தன்னுடன் வாழ கெனடி சம்மதித்து விட்டதாக மர்லின் மன்றோ தெரிவித்தார். அதற்கு கெனடியின் மனைவி ஜாக்குலின் அலட்டிக் கொள்ளவில்லை. நான் விலகத்தயார். அப்புறம் நீதான் சிரமப்படப் போகிறாய் என்று பதில் அளித்தார். இந்த தகவலை, ஜோன் கெனடியின் சகோதரியை மணந்த மறைந்த நடிகர் பேட்டர் லாபோர்டு தெரிவித்ததாக அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும், கெனடியும், அவருடைய மனைவியும் போதை ஊசி போட்டுக்கொள்ளும் பழக்கம் கொண்டவர்கள் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

# கல்பாக்கம் அணு மின்நிலையத்தை புகைப்படம் எடுத்தவருக்கு சிறை

கல்பாக்கம் அணு மின்நிலையத்தைப் புகைப்படம் எடுத்த இளைஞரைப் பொலிஸார் கைது செய்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் கல்பாக்கத்தில் மேப்ஸ் அணு மின்நிலையம் அமைந்துள்ளது. இங்கு புதிய அணு மின்நிலைய கட்டுமானப் பணிகள் தனியார் ஒப்பந்ததாரர் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியில் ஈடுபட்டு இருந்த மதுராந்தகம் லத்தூரைச் சேர்ந்த சாபீர் அலி, அணு மின்நிலையப் பகுதிகளைப் புகைப்படம் எடுத்துள்ளார். இதைப் பார்த்த மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் சாபீர் அலியைப் பிடித்து கல்பாக்கம் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

அவரிடம் விசாரணை நடத்திய பொலிஸார், பின்னர் திருக்கழுகுன்றம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## கல்வி உபகரணங்கள் அன்பளிப்பு



நெடுந்தீவு பிரபல வர்த்தகர் அமரர் வ.ஐ.நல்லதம்பி ஞாபகார்த்தமாக நெடுந்தீவிலுள்ள முன்பள்ளிகளுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கடந்த 06 ஆம் திகதி நெடுந்தீவு மத்தியிலுள்ள தென்னிந்திய திருச்சபை பகல் பராமரிப்பு நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெடுந்தீவு ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் அமைப்பாளரும் பிரதேச சபைத் தவிசாளருமாகிய தானியேல் றெக்சியன், நெடுந்தீவு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி ஆகியோர் கலந்து கொண்டு பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தனர்

இன்நிகழ்வுக்கு நெடுந்தீவு முன்பள்ளிகளின் ஒன்றிய இணைப்பாளர் திருமதி ச.செபஸ்தியாம்பிள்ளை தலைமை தாங்கினார். பாடசாலை உபகரணங்களை வ.ஐ.நல்லதம்பியின் பிள்ளைகள் அன்பளிப்புச் செய்திருந்தனர்.

## தேர்தல் வன்...

அறிவித்துள்ளது. வடமாகாணத்தில் 3 முறைப்பாடுகளும் மத்திய மாகாணத்தில் 6 முறைப்பாடுகளும் வடமேல் மாகாணத்தில் 4 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாகவும் தேர்தல் முறைப்பாடு அலுவலகம் தெரிவித்துள்ளது.

## வரணி...

அதிகாரி உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் வைத்தியசாலையின் பல்வேறு குறைபாடுகள் குறித்து ஆராயப்பட்டது.

இதன்படி குறைநிறைகளை நிவர்த்திசெய்யும் வகையில் அம்புலன்ஸ் வண்டிக்கு இரவு நேர சாரதி உள்ளபோதிலும், பகல் நேரத்திற்கு சாரதி நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது, 24 மணி நேர நிரந்தர வைத்தியரை நியமிப்பது, ஆண்களுக்கு விடுதி யின்மையால், விடுதி அமைப்பது குறித்த நடவடிக்கைகளை செயற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் நோயாளர்கள் உட்பட பலர் கலந்து கெண்டனர். (130)

## விசேட...

கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கமைய விசேட தேவையுடையோர் வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்வதற்கான வாகன அனுமதியை பெறுவதற்கு, தேர்தல் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறியத்தர வேண்டுமென பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் கூறியுள்ளார்.

## பகிஷ்கரிப்பில்...

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பை அடுத்து பிராந்திய சுகாதார சேவைகள் பதில்பணிப்பாளர் சிவராணி வைத்தியர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது உளநல விடுதியில் இருந்து குறித்த தாதிய உத்தியோகத்தரை வேறு பிரிவுக்கு இடமாற்றுமாறு வைத்தியர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து அவர் வேறு பிரிவிற்கு தற்காலிகமாக இடமாற்றப்பட்டதுடன், அவர் மீதான விசாரணைகள் தொடரவுள்ளன. இதனையடுத்து வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது.

## தபால்...

ஆர்.எம்.எல்.ரத்நாக்க கூறியுள்ளார்.

முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வாக்களிப்பதற்கான சந்தர்பம் வழங்கப்படவுள்ளது.

மாகாண சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை கடந்த இரண்டாம் திகதியுடன் நிறைவுபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகப்பிரிவில் மல்லியத்தீவு கிராமத்தில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு மல்லியத்தீவு கிராமத்தில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் தொடர்பான கலந்துரையாடல், பிரதேச செயலர் இ.பிரதாபன் தலைமையில் நேற்றுக்காலை 9.00 மணியளவில் பிரதேசசெயலக மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது

இதற்கு பிரதம அதிதியாக முல்லைமாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மேலதிக அரசாங்க அதிபர் மோகனதாஸ் பொது நிர்வாக உள்நாட்டு அலுவலர், அமைச்சின் செயலர் ஜெ.டளலகே, பெண்கள் பணியகத்தின் பணிப்பாளர் ஆர்.ஏ.சூலநந்தா கொழும்பு திட்ட செயலாளர் நாயகம் அடம்பன் மணிக்கு ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடதக்கது. (40)


## இனம்தெரியாத அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடும் தமக்கும் தமது வேட்பாளர்களுக்கும், இனம் தெரியாதவர்களிடம் இருந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுவருவதாக நாகபாம்புச் சின்னத்தில் போட்டியிடும் தலைமை வேட்பாளராகிய பொன்.மதிமுகராசா விஜயகாந் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுயேட்சையாக தேர்தலில் போட்டியிடுவதற்கு யாழ். உதவித்தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது முதல் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அவர் இவ்விடயம் சம்பந்தமாக உதவித்தேர்தல் ஆணையாளரிடமும், பொலிஸாரிடமும் தான் முறையிட்டிருப்பதாவும், தானும், தனது தாயும், தனது சகோதரனும் இத்தேர்தலில் போட்டியிடுவதனால் தமக்கு





பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு தான் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரியிருப்பதாகவும், ஏற்கனவேயும் தனது தந்தை சுட்டுக்கொல்லப்பட்டதுடன், சகோதரன் சுட்டு காயப்படுத்தப்பட்டதன் காரணமாக தமக்கு பாதுகாப்புத்தேவை என்றும் அவர் கோரியுள்ளார்.

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினர் வசந்தநாதன் சிவநாதன் கூட்டமைப்பில் இருந்து விலகி தமது சுயேட்சையில் போட்டியிடுவதாகவும் தெரிவித்த விஜய காந் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வடமாகாணசபைத் தேர்தலில் வேட்பாளர் தெரிவில் கையாண்டவிதம் குறித்தும் அவர் கண்டனம் வெளியிட்டுள்ளார். (பா)

## வீதிவிபத்தில் இருவர் பலி

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இருவர் மரணமடைந்துள்ளதுடன், மூவர் காயமடைந்துள்ளனர்.

பயணித்துக்கொண்டிருந்த கார் ஒன்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியுடன் மோதி விபத்திற்குள்ளானது.

பின்னதுவவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் காயமடைந்த மேலும் மூவர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## புதிய எம்.பி நளின் பண்டார

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக நளின் பண்டார நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

குருநாகல் மாவட்டத்தை சேர்ந்த இவர், ஜயசிறி ஜயசேகரவின் இராஜினாமாவை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மலையகத்தில் கடும் குளிர்

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களாக நிலவி வரும் கடும் குளிருடன் கூடிய காலநிலை காரணமாக வயோதிப பருவத்தில் இருப்பவர்கள் உயிரிழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடும் குளிரை தாங்கிக் கொள்ள முடியாது பல வயோதிபர்கள் இறந்து விட்டதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் சுகவீனமான நிலைமையில் இருக்கும் வயோதிபர்களின் உடல் நிலை, இந்த காலநிலை காரணமாக மிகவும் மோசமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெற்றி நிச்சயம் ஜோன்.செனவிரட்ண நம்பிக்கை

(கொழும்பு)

எவர் எந்த தடைகளை போட்டாலும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். ஆளும ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின், வடமேல், மத்திய மாகாணங்களில் மாத்திரமின்றி, வடக்கு மாகாண சபையையும் கைப்பற்றும் மற்றும் வேட்பாளர்களின் உதவியுடன் ஆளும் கட்சி அமோகவெற்றி பெறும். தேர்தல் பிரசாரங்களை அமைதியான முறையில் மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

வன்முறைகளில் ஈடுபட முடியாது. அமைதியான தேர்தல் பிரசாரங்களின் ஊடாக நாம் வெற்றியை நோக்கி செல்வோம் எனவும் அமைச்சர் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

## தேர்தல்...

ரொட்டிகள் காணப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதற்கமைய அப்பகுதி பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. அவர்கள் அவற்றை உடனடியாக அகற்றியிருக்கின்றனர். தற்போதும் அகற்றுகின்றனர்.

பொலிஸாருக்கு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது சம்பந்தமாக கிடைக்கும் தகவலையடுத்து அவர்கள் உடனடியாகச் செயற்படுவார்கள் அவ்வாறு அவர்கள் செயற்படுகின்றார்களா, சுவரொட்டிகள் எங்கெல்லாம் ஒட்டப்படுகின்றன என்பது பற்றி கண்காணிப்பு செய்வதற்கு இன்று முதல் இரண்டு அதிகாரிகள் குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் செல்வார்கள். இதன் மூலம் உடனடியாக தேர்தல் சட்ட மீறல்களை இனங்காணமுடியும். இவ்வாறு இனம்காணப்படும் தேர்தல் சட்டமீறல்களை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## சிறுவர்...

சட்டங்களும் ஒரு நூற்றாண்டு பழமையானது என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

உத்தேச சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். சம்பவத்தில் பாதிக்கப்பட்டோரின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உலகின் ஏனைய நாடுகளைப் போன்றே நாட்டின் சட்ட விதிகளில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# திறந்த பாடசாலைக் கல்வி
# யாழ்.மாணவர்களுக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தீவகம், யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம் ஆகிய கல்வி வலயங்களில் 6 பயிற்சி நிலையங்களில் 6 மாத பயிற்சியாக திறந்த பாடசாலைக் கல்வித் திட்டம் நடைமுறைப் படுத்தப் படுவதாக வடமாகாணக் கல்வித திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் தெரிவித்தார்.

தீவக கல்வி வலயத்தில் நயினாதீவு சிறிகணேஷ கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் ஆங்கிலம், சிங்களம், தொழில் பயிற்சிக் கல்வி தொடர்பாக 60 பேருக்கு இக் கல்வி வழங்கப்படுகின்றது.வலிகாமம் கல்வி வலயத்தில் மருதனார் மடம் இறையியற் கல்லூரி, தெல்லிப்பழை மாவை கலட்டி, கொல்லங்கலட்டி கணேச முன்பள்ளி நிலையம் ஆகிய இரண்டு நிலையங்களில் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் இத் திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் தலா இரண்டிலும் 60 பேர் வரை பங்கு கொண்டிருக்கிறார்கள்.

யாழ். கல்வி வலயத்தின் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆகிய இரண்டு நிலையங்களில் 60 இற்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றுகின்றார்கள்.

வடமராட்சி கல்வி வலயத்தில் வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் கணிதம், அறநெறிக் கல்வி ஆகியவற்றில 60 இற்கு மேற்பட்டவர்கள் பங்கு பற்றுகிறார்கள்.

பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகிய பலரும் இதில் கலந்துகொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# உடைத்த போத்தலால் ஆசிரியர் மீது குத்து

(வடமராட்சி)

வடமராட்சி நெல்லியடி குஞ்சர் கடையடிப்பகுதியில் போத்தல் குத்துக்குள்ளான ஆசிரியர் ஒருவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை இமையாணன் குஞ்சர் கடையடியைச் சேர்ந்த மகாலிங்கம் சந்திரகுமார் (வயது-26) என்பவர் மீதே நேற்றுமுன்தினம் இரவு 8.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவராலே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில் குஞ்சர் கடையடி மாஸ்டர் வீதியூடாக கைத்தொலைபேசியில் கதைத்தவாறு இவர் வீடு நோக்கி நடந்து சென்ற வேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவரது முதுகுப் பகுதியில் உடைத்த போத்தலால் குத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

உடனடியாக இவர் மந்திகை ஆதாரவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக இவர் மீது இனந்தெரியாதோர் இவரது வீட்டுவாசலில் வைத்து பொல்லால் தலையில் தாக்கியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (18)

# மானிய உரம் கடத்தல்: மாங்குளத்தில் இருவர் கைது

அரசினால் மணியமாக வழங்கப்பட்ட ஒரு தொகை உரவகைகளை லொறியில் கடத்தி சென்ற வேளையில் மாங்குளம் பொலிஸார் அதனை கைப்பற்றியதுடன் இச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்களையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் படுத்திய வேளை அவ்விருவரையும் 22/08/2013 வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்வாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

ஆரசினால் வழங்கப்பட்ட உரங்களை கூடுதல் விலைக்கு வேறு நபர்களுக்கு விற்பனை செய்யும் பொருட்டே கொண்டு சென்றதாக பொலிஸார் மன்றுக்கு தெரிவித்தனர்.

உரம் சம்பந்தமான பெறுமதி அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (170)

# ராஜதுரை எம்.பி. கட்சி தாவ முயற்சி?

இலங்கை தொழிலாளர் காங்கிர்ஸின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பெருமாள் ராஜதுரை, இ.தொ.கா. விலிருந்து ராஜினாமா செய்துகொண்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலிருந்து இராஜினாமா செய்துக் கொண்டுள்ள அவர் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றுமொரு கட்சியில் இணைந்துக்கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது.

அதற்கான பேச்சுவார்த்தை நிறைவடைந்துள்ளதாகவும் கட்சி மாற்றத்தின் பின்பு இவர் இணைந்து கொள்ளும் அமைப்பில் இவருக்கு செயலாளர் பதவியை வழங்குவதற்கும் குறித்த தொழிற சங்கத்தின் தலைவர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

# எண்ணெய் குழாயில் பாரிய வெடிப்பு



(கொழும்பு)

முத்துராஜவெல எண்ணெய் களஞ்சியசாலையில், எரிபொருளை விநியோகிக்கும் குழாயில் நேற்று அதிகாலை வெடிப்பு ஏற்பட்டது.

3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசலை விநியோகித்து வந்த குழாயிலே வெடிப்பு ஏற்படடதாக கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் தெரிவித துள்ளது.

அண்மைய நாட்களில், கடலில் நிலவும் சீற்ற நிலைக் காரணமாகவே இந்த வெடிப்பு ஏற்பட்டதாக அந்த கூட்டுத் தாபனம் குறிப்பிட்டுள்ளது.

எரிபொருள் கப்பலில் இருந்து முத்துராஜவெல எண்ணெய் களஞ்சியசா லைக்கு எரிபொருளை விநியோகிக்கும் குழாயிலேயே வெடிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குழாயில் ஏற்பட்ட வெடிப்பை சீர்படுத்தும நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கனிய எண்ணெய் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர் பந்துல சமன் குமார தெரிவித்துள்ளார்.

# குமரன் பத்மநாதன் நாடு முழுவதும் செல்லலாம்
## இப்படிச் சொல்கிறார் தினேஸ்குணவர்த்தன

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் ஓர் சுதந்திர மனிதர் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சுதந்திரமாக எந்தவொரு இடத்திற்கும் அவர் செல்ல முடியும் என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குமரன் பத்மநாதன் அரசாங்க வீடொன்றில் தங்கவில்லை எனவும் அவர் கிளிநொச்சி, மதவாச்சி உள்ளிட்ட பல இடங்களுக்கு சுதந்திரமாக செல்வதாகவும் ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குமரன் பத்மநாதன் போன்றவர்களை அரசாங்கம் மன்னரைப் போன்று நடாத்தும் அதேவேளை, சாதாரண புலி உறுப்பினர்களை கடுமையாக நடாத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல குற்றம் சுமத்தியுள்ளார்.

குமரன் பத்மநாதனுடன் பிரச்சினையிருந்தால் அதனை அவரிடம் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறு அமைச்சர் தினேஷ் குணவர்தன லக்ஸ்மன்



கிரியல்லவிடம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தமக்கு எதிராக ஆயுதம் ஏந்தியவர்களுக்கு மன்னிப்பு வழங்கியதாகவும் அதேபோன்று வடக்கில் ஆயுதம் ஏந்தியவர்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷமன்னித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் புலி உறுப்பினர்கள் சாதாரண மக்களாக வாழ முடியும் எனவும், அவர்களை ஓரம் கட்டக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# துறைமுக அபிவிருத்தி பார்வையிட அனுமதி



ஜனாதிபதி பணிப்புரைக்கு அமைய கொழும்பு துறைமுக விஸ்தரிப்பு திட்டத்தை பார்வையிடுவதற்கு நேற்று முதல் பொது மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் எதிர்வரும் 13ஆம் திகதி வரை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணி வரை துறைமுக விஸ்தரிப்பு திட்டத்தை மக்கள் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


துறைமுகத்தை பார்வையிட வருபவர்கள் தூபி நுழைவாயில் ஊடாக பிரவேசித்து எவ்வித இடையூறும் இன்றி துறைமுக விஸ்தரிப்பு திட்டத்தை பார்வையிட முடியுமென, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் தொடர்பாடல் மற்றும் மக்கள் உறவுகள் பிரிவின் பிரதிப்பிரதம முகாமையாளர் நலீன் அபோன்சு குறிப்பிட்டுள்ளார்.

# மாபெரும் கலை நிகழ்ச்சி

யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையமும் யாழ்.பொது வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடாத்தும் "ஜம்பு மர நடுகையை ஊக்கு விக்கும் மாபெரும் கலைநிகழ்ச்சி" இடம்பெறவுள்ளது.

நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நாளை பி.ப. 2.30 மணி முதல் பிற்பகல் 6.30 மணி வரை நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

நடனம், இன்னிசை, நாடகம், கவிதை உட்பட பல்வேறுபட்ட கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.



நல்லூர் கந்தசுவாமி கோவிலில் 2013 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 12.08.2013 ஆம் திகதி (திங்கட்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற உள்ளதால் பக்தர்களின் நன்மை கருதியும், ஆலயச் சூழலின் புனிதத்தன்மையை நோக்காகக் கொண்டும் யாழ் மாநகர சபையால் ஆலயச் சுற்றாடலில் 200 லோட் மணல் பரவும் பணிகள் மோற்கொள்ளப்படுகின்றன.

# தேர்தல் விதிகளை மீறினால் கடும் நடவடிக்கை வேண்டும்
## "கபே" மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுவோருக்கு எதிராகப் பொலிஸார் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கபே அமைப்பு கோரிக்கை விடுத் துள்ளது சுமத்தியுள்ளது.

கம்பளை பிரதேசத்தில் பாரியளவில் அமைக்கப் பட்டுள்ள சட்டவிரோத தேர்தல் பிரச்சாரப் பதாகைகளை அகற்ற காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த அமைப்பு கேட்டுள்ளது.

கம்பளை நுவரெலிய பழைய பாலத்திற்கு அருகாமையில் பாரியளவில் இந்த சட்டவிரோத பிரச்சாரப் பதாகை அமைக்கப்பட்டுள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கம்பளை மற்றும் நவலப்பிட்டி பிரதேசத்தில் இவ்வாறான 60 சட்டவிரோத பதாகைகள் காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்கள் பக்கச் சார்பற்ற முறையில் அமுல் படுத்துவதன் மூலம் நியாயமான முறையில் தேர்தலை நடாத்த முடியும் என கபே அறிவித்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.